விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 261 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 20 புதன்கிழமை (06.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## சனல் 4 காணொலி
## சர்வதேச விசாரணை
### அமைச்சர் மனுஷ நாணயக்கார



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சனல் 4 வெளியிட்ட தகவல்கள் தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ளும் என அமைச்சர் மனுஷ நாணயக்கார நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 15

### தேர்தலில் வெற்றி பெற
## குண்டுத் தாக்குதல் அவசியமில்லை
### மகிந்தானந்த அளுத்கமகே



(கொழும்பு)

ஏப்ரல் குண்டுத்தாக்குதலுக்கு முன்னரே ராஜபக்ஷர்கள் மக்களாணையை வென்று விட்டார்கள். குண்டுத்தாக்குதலை மேற் கொண்டு மக்களாணையை பெற வேண்டிய தேவை ராஜ 04

### ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற
# மக்களை குண்டு வைத்து கொன்றனர்
### சனல் 4 முன்னோட்டக் காணொலியில் அதிர்ச்சி






(லண்டன்)

கோட்டாபயவை ஜனாதிபதியாக்க இலங்கையில் ஒரு குழப்பமான நிலை தேவைப்பட்டது. அதற்காக சொந்த மக்களையே குண்டு வைத்து கொன்றனர் என சனல் 4 முன்னோட்ட காணொலியில் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## ஜனவரி முதல் வடக்கு ரயில் பாதை மூடப்படும்
### போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 06 மாதங்களுக் குள் வடக்கு தொடருந்து பாதையை நவீனமயப்படுத்த திட்டமிட்டுள்ளதாக போக்கு வரத்து மற்றும் பெருந்தெருக் கள் அமைச்சர் பந்துல குண வர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, நவீனமயப்படுத்தல் 15

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி இன்று ஆரம்பம்

(முல்லைத்தீவு)

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி இன்று காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய் பகுதிக்கு நேற்று மாலை விஜ யம் மேற்கொண்ட முல்லைத் தீவு மாவட்ட நீதிபதி த.பிரதீ பன், தொல்பொருள் சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசு தேவ, யாழ்ப்பாணம் சட்ட வைத் திய அதிகாரி செ.பிரணவன், சட்டத்தரணிகளான ரணித்தா ஞானராசா, 15

## எந்தத் தேர்தலையும் அரசு ஒத்திவைக்காது
### அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் மாத் திரமல்ல எந்தவொரு தேர்த லையும் ஒத்தி வைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கவில்லை. அடுத்த வருடம் உரிய நேரத் தில் அனைத்து தேர் தல்களும் இடம் 15

### 2½ இலட்சத்துக்கு நாகர்கோவிலில் மாம்பழம் ஏலம்

(கரணவாய்)

நாகர்கோவில் வடக்கு முருகையா தேவஸ்தான மாம் பழத் திருவிழாவில் மாம்பழம் ஒன்று இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட் 15

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்
## சர்வதேச விசாரணை அவசியம் - சஜித்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை இந்த நாட்டில் விசாரணை நடத்தி ஒருபோதும் கண்டுபிடிக்க முடியாது. அதனால் சர்வதேச 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**Baskaran Ranujan (2022 A/L)**
- Combined Maths - A
- Physics - A
- Chemistry - A

★ 6 மாதங்களில் 3 பாடங்களையும் முழுமையாக கற்றுத்தந்து என்னை 3A எடுக்க வைத்த Science Universe ஆசிரியர் Loga Sir அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Thankyou Sir* *Best Wishes*

**Science Universe**
Loga Sir No:- 76 322 0916 (16952)

## நாகபூஷணி திருமண சேவை

**MBBS, BSC Civil Engineering, BSC, MSC, LLM, IT Professionals, CIMA, BBA, MBA, BA**

கற்று வேலை செய்பவர்கள் மற்றும் Teachers, govt Jobs, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும். (C-7188)

**264, ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16932)

தொடர்புகளுக்கு:- குரு
**076 755 8606,**
**077 874 3204, 077 288 0152**

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 09 . 1934



இறப்பு 04 . 09 . 2023

### திருமதி P.M. அழகரட்ணம்

(ஓய்வு நிலை ஆசிரியை)
(யா/வேலணை மத்திய கல்லூரி
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி P.M அழகரட்ணம் அவர்கள் (2023.09.04.) (திங்கட்கிழமை) அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அழகரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிதம்பரப்பிள்ளை அவர்களின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான திரு.புஸ்பராஜா மகேந்திரன் சிதம்பரப் பிள்ளை, புஸ்பராணி திருநாவுக்கரசு (ராணி) மற்றும் புஸ்பாதேவி சிதம்பரப் பிள்ளை (றஞ்சி), புஸ்பாமிர்தம் சுபாரட்ணம் (பபா) காலஞ்சென்ற புஸ்பாலயம் சிவகுரு நாதன் (ஞானம்) மற்றும் சறோஜினி சுப்பிரமணியம் (பிள்ளை), ஸ்டிவன் புவேந்திரன் (இந்திரன்) காலஞ்சென்ற புவி சிதம்பரப்பிள்ளை (ராஜன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 40/2, கோவில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு 2023.09.06 ஆராதனைகளின் பின் நல்லடக்கத்திற்காக இன்று (புதன் கிழமை) காலை 10.30 மணிக்கு தூய திருமுழுக்கு யோவான் ஆலய கல்லறைத் தோட்டத்திற்கு (செண்.ஜோண்ஸ் ஆலயம்) எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

40/2, கேவில் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம் (16947)

தகவல்
தி.கதிர்காமநாதன்
பெறாமகன்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

*அன்புடையீர்!*
கடந்த 08.08.2023 அன்று செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் கந்தசாமி அன்னம்மா



மண்மகிழ 18.07.1944 விண் நெகிழ 08.08.2023

உணர்வோடு கலந்திட்ட எம்முயிர்த்தாயே
உம் பிரிவால் வாடுகின்றோம் உறவுகளும்
பிள்ளைகளும் அன்பு பண்பு அறிவு திறன்
இவையனைத்துக்கும் நீரே அம்மா எமக்கு
இவ்வுலகின் முதல் தாயே அம்மா வேராக
இருந்து விழுதுகளை உய்வித்தீர் இன்று
விழுதுகள் மட்டும் வேரிழந்து நிற்கிறதே
அம்மா இனி எங்கள் வாழ்வுதனில் ஏழேழு
தலைமுறைக்கும் நீங்கள்தான் குலதெய்வம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 07.09.2023 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் அன்னாரின இல்லத்தில் இடம்பெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்று மதியம் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோப்பு, அச்சுவேலி. தகவல்: குடும்பத்தினர் 076 994 8679 (16890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவின் புதிய திரிபான 'பிரோலா'

# உலகளாவிய ரீதியில் பெரும் அச்சுறுத்தல்

## சர்வதேச ஊடகங்கள் தகவல்

**(ஜெனிவா)**

**கடந்த சில வருடங்களுக்கு முன்னர் உலகளாவிய ரீதியில் பெரும் அச்சுறுத்தல் விடுத்த கொரோனா தொற்று பெரும்பாலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் தற்போது புதிய வகையான மற்றுமொரு கொவிட் உலகம் முழுவதும் பரவி வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.**

இந்நிலையில் இந்த புதிய வகையைப் பற்றி சர்வதேச வல்லுநர்கள் பிரோலா என அறிமுகப்படுத்தியுள்ளனர்.

கடந்த காலத்தில் பரவிய கொவிட் வைரஸின் கொடிய ஒமிக்ரோன் மாறுபாட்டை விட இந்த மாறுபாடு மிகவும் பிறழ்ந்த மாறுபாடு என்று பரிந்துரைக்கப்படுகிறது.

குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, இஸ்ரேல், கனடா, டென்மார்க், தென்னாபிரிக்கா, சுவீடன், நோர்வே, சுவிட்சர்லாந்து மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் இந்த வகை இதுவரை இனங்காணப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

பைரோலாவின் புதிய திரிபு மீண்டும் உலகம் முழுவதும் தொற்றுநோய்களின் எழுச்சியை ஏற்படுத்தும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சீரற்ற வானிலையால்

## 6000 இற்கும் அதிகமானோர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 49 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வவுனியா, புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, களுத்துறை, கொழும்பு, இரத்தினபுரி, கேகாலை, காலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலத்த மழை மற்றும் காற்றினால் நாடளாவிய ரீதியில், 122 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி-5)

# மரண அறிவித்தல்

## பொன்னையா பாலச்சந்திரன்

தோற்றம்-06.11.1936
மறைவு-04.09.2023



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாலச்சந்திரன் (ஓய்வுநிலை அதிபர் - மாணிக்கவாசகர் வித்தியாலயம்) அவர்கள் 04.09.2023 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா (ஓய்வுநிலை அதிபர்), சிவகாமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பண்டிதர் பொன் கணேசன் (கல்வி அதிகாரி), காலஞ்சென்ற பொன்னையா மகாதேவன் (பிரதம எழுதுவினைஞர்), பொன்னையா சோமசுந்தரம் (கால்நடை வைத்தியர்-லண்டன்) ஆகியோரது அன்புச் சகோதரரும் கமலாதேவியின் அன்புக் கணவரும், நந்தினி பவானந்தன் (லண்டன்), நளினி (கொழும்பு), நளாயினி (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌரி (பாரிஸ்), சௌந்தரி (அவுஸ்திரேலியா) ஆகியோரது பாசமிகு சின்னையாவும் ரவீந்திரன் (ஓய்வுபெற்ற அதிபர்), குமரநேசன் (பொறியியலாளர்- கொழும்பு), வேலாயுதம்பிள்ளை (நெதர்லாந்து), அம்பாலிகா (லண்டன்) ஆகியோரது அன்பு மாமனாரும் ஐங்கரன், பிரவீனா, நிலோஷன், கன்யா, அரோன், அக்ஷரா, வேணுகானன், நித்திலா, வினுஷன், நிதுஷன், கார்த்திகா, தர்ஷிகா, சோபிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கே.சி.மகாதேவன்( ஓய்வுநிலை உதவி ஆணையாளர்), மகேஸ்வரி (பூபதி), காலஞ்சென்ற மகாலிங்கம் (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி- ஒட்டிசுட்டான்), காலஞ்சென்ற புவனேஸ்வரி, லிங்கவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவக்குமார் (கனடா), காலஞ்சென்ற ஜெயக்குமார், குமாரி (கனடா), சாந்தி (கனடா), பாலகுமார் (கனடா), மதன்ராஜ் (லண்டன்), மேனகா (லண்டன்), மேகலா (லண்டன்), நீரஜா (அமெரிக்கா) ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.09.2023 இன்று புதன்கிழமை அவரது இல்லத்தில் காலை 9 மணியளவில் நடைபெற்று பின்னர் அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (16953)

தொடர்புகளுக்கு-
நந்தினி-மகள்- +94776795951 (Tel: +94 21 2264491)
பவானந்தன் - மகன்-+44 7753461304
நளினி-மகள்-+94773114416
ரவீந்திரன்-மருமகன்-+94779258442 (Tel:+94 21 2264491)

இங்ஙனம்,
குடும்பத்தினர்,
கரணவாய் கிழக்கு,

# நல்லிணக்க விவகாரத்தில் அரசாங்கம் ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டும்

## ஐ.நா வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லிணக்க விவகாரத்தில் அரசாங்கம் அர்த்தமுள்ள வகையில் ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டியதன் அவசியத்தை சிவில் சமூகப்பிரதிநிதிகளிடம் மீளவலியுறுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க்-அன்ட்ரூ. இனிவருங் காலங்களில் இலங்கையில் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் மிகநெருக்கமாகப் பணியாற்றுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதியாக அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மார்க்-அன்ட்ரூ கடந்த சில நாட்களாக நாட்டின் பல்வேறு முக்கிய தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றார்.

அந்தவகையில் மார்க்-அன் ட்ரூக்கும் தலைநகர் கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கிவரும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வார இறுதியில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்திய நடவடிக்கைகள், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், பயங்கரவாதத் தடைச்சட்டம், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை, சிவில் சமூக அமைப்புக்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

அதன்படி இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவது போல் தெரிந்தாலும் அச்செயன் முறைகளின் ஊடாகக் குறிப்பிடத்தக்கள விலான முன்னேற்றங்கள் எவையும் எட்டப்படவில்லை என்று ஐ.நா வதிவிடப்பிரதிநிதியிடம் சிவில் சமூக உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அதற்கு உதாரணமாக காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள போதிலும் காணாமல் போனோருக்கு என்ன நேர்ந்தது எனக் கண்டறியப்படவில்லை என்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் நிறுவப்பட்டிருந்தாலும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உரியவாறு இழப்பீடு வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் உண்மையான அக்கறையையும் அரசியல் ரீதியிலான தன் முனைப்பையும் அரசாங்கம் கொண்டிருக்கின்றது என்பதில் தமக்கு நம்பிக்கை இல்லை எனக் குறிப்பிட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தற்போது அரசாங்கம் ஸ்தாபிப்பதற்கு முயலும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரை இலக்காகக் கொண்ட கண்துடைப்பு முயற்சி மாத்திரமே என்று ஐ.நா வதிவிடப் பிரதிநிதியிடம் தெரிவித்தனர்.

இவற்றை செவிமடுத்த ஐ.நா வதிவிடப் பிரதிநிதி நல்லிணக்க விவகாரத்தில் அரசாங்கம் அர்த்தமுள்ள விதத்தில் ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டிய தன் அவசியத்தை மீளவலியுறுத்தியதுடன் இனிவருங்காலங்களில் இலங்கையில் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் மிக நெருக்கமாகப் பணியாற்றுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணத்திற்கான இந்திய அணி அறிவிப்பு

## சஞ்சு சாம்சனுக்கு ஏமாற்றம்




இந்தியாவில் வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்க ளில் 50 ஓவர் உலகக்கிண்ணத்தொடர் நடைபெற உள்ளது.

இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, நியூ சிலாந்து, இங்கி லாந்து உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன.

ஒக்டோபர் 5 ஆம் திகதி நடைபெற உள்ள தொடக்க ஆட்டத்தில் இங்கி லாந்தும் நியூசிலாந்தும் அகமதா பாத்தில் மோத உள்ளன.

இந்திய அணி தனது தொடக்க ஆட் டத்தில் அவுஸ்திரேலியாவை ஒக் டோபர் 5ஆம் திகதி சென்னையில் எதிர் கொள்கிறது.

உலகக்கிண்ண தொட ருக்கு இன் னும் ஒருமாத காலமே உள்ள நிலை யில் அனைத்து அணிகளும் தீவிர மாக தயாராகி வருகின்றன.

இந்நிலையில் உலகக் கிண்ணத் துக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியை பி.சி.சி.ஐ நேற்று அறிவித் துள்ளது.

சஞ்சு சாம்சன் அணி யில் இடம் பெறவில்லை. துணை கப்டனாக ஹர்திக் பாண்ட்யா நியமிக்கப்பட் டுள்ளார்.

உலகக் கிண்ணத்துக் கான இந்திய அணி வீரர்க ளின் விபரம் ரோகித் சர்மா, சுப்மன் கில் , விராட் கோலி, ஸ்ரேயாஸ் அய்யர், ஹர்திக் பாண்ட்யா, ஜடேஜா, கே.எல்.ராகுல், குல்தீப் யாதவ் , மொஹமட் சமி , முக மது சிராஜ் , பும்ரா , ஷர்துல் தாகூர் , சூர்யகுமார் யாதவ், இஷான் கிஷன், அக்சர் படேல் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். (6)

## குண்டுத்...

பக்ஷர்களுக்கு இல்லை என பாராளு மன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ் வாய்க்கிழமை இடம்பெற்ற ஆயுர் வேதம் (திருத்தச்) சட்டமூலத்தின் மீதான விவாதத்தின்போது உரையாற்றுகை யில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதா வது,

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்ப வம் தொடர்பில் சனல் 4 ஊடகம் 15 நிமிட காணொளி ஒன்றை வெளி யிட் டுள்ளது.

இந்த காணொளி தற்போது தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது.

தென்னிலங்கையில் சிங்கள அரச தலைவர் ஒருவரை உருவாக்குவதற் காக இந்த குண்டுத்தாக்குதல் நடத் தப்பட்டதாக இந்த காணொளியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் எதிர் வரும் வாரம் இடம்பெறவுள்ள பின் னணியில் தான் சனல் 4 இவ்வாறான காணொலிகளை வெளியிடுகிறது.

வெள்ளைக் கொடி ஏந்தி வந்த அப்பாவி தமிழர்கள் படுகொலை செய் யப்பட்டார்கள் என குறிப்பிட்ட சனல் 4 தான் தற்போது ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து செய்தி களை வெளியிட்டுள்ளது.

சனல் 4 விற்கு முறைப்பாடு அல் லது தகவல்களை வழங்கியுள்ள அன் ஷிப் அசாத் மௌலானா என்ற நபர் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேச துரை சந்திரகாந்தனின் ஊடாக ஊடக செயலாளராக அடையாளப்படுத்தப் பட்டுள்ளார். இந்த நபர் சுவிஸ்லாந்து நாட்டில் அரசியல் பாதுகாப்பு கோரி யுள்ளார்.

அன்ஷிப் அசாத் மௌலானா என்ற இந்த நபரின் தனிப்பட்ட வங்கி கணக் குக்கு 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதி யில் வெளிநாடுகளில் இருந்து 700 இலட்சம் ரூபாய்வைப்பிலிடப்பட்டுள்ளது.

அத்துடன் அவர் தெஹிவளையில் உள்ள வீட்டை 500 மில்லியன் ரூபா யுக்கு விற்பனை செய்துள்ளார். இந் தளவு செல்வந்தரான இந்த நபர் 2017 ஆம் ஆண்டு முதலாவதாக பணியில் இருந்தபோது 6000 ரூபாய் மாத சம் பளத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

மாதம் 6000 ரூபா சம்பளம் பெற்ற நபரின் வங்கி வைப்பில் 700 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது. மறு புறம் 500 மில்லியன் ரூபாயுக்கு வீட்டை விற்றுள்ளார்.

இவர் தான் தென்னிலங்கையில் சிங்கள அரச தலைவர் ஒருவரை உரு வாக்க ஏப்ரல் 21 குண்டுத்தாக்கு தல் சம்பவம் நடத்தப்பட்டதாக குறிப்பிடு கிறார். இவருக்கு எதிராக பொலிஸில் நிதி மோசடி உள்ளிட்ட பல முறைப் பாடுகள் உள்ளன.

இந்த குற்றச்சாட்டுக்கள் முறையற் றது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்றது. ஆனால் 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூ ராட்சிமன்றத் தேர்தலில் மகிந்த ராஜ பக்ஷவை முன்னிலைப்படுத்தி ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றிக் பெற்றது. ஏப்ரல் குண்டுத் தாக்குதலுக்கு முன்னர் ராஜ பக்ஷர்கள் மக்களாணையை பெற்றுக் கொண்டனர்கள்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்ப வம் குறித்து பலர் கைது செய்யப்பட் டுள்ளார்கள். அப்போதைய அரசாங் கத்தின் ஜனாதிபதி, பாதுகாப்பு செய லாளர், புலனாய்வு பிரிவினர் ஆகி யோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சர்வதேச நிறு வனங்கள் அறிக்கை சமர்ப்பித்துள் ளன. மக்களாணையை வெல்ல குண் டுத்தாக்குதலை நடத்த வேண்டிய தேவை ராஜபக்ஷர்களுக்கு இல்லை.

சனல்4 குறுகிய அரசியல்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற் படுகிறது. எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் மக் கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள்.

தென்னிலங்கையில் சிங்கள அரச தலைவரை தோற்றுவிக்க 9 முஸ்லிம் அடிப்படைவாதிகள் தற்கொலை குண் டுத்தாரிகளாக மாறுவார்களா?

கோட்டாபய ராஜபக்ஷ இரண்டு வருடகாலம் ஜனாதிபதியாக பதவி வகித்தார். பல்வேறு காரணிகளால் அவர் பதவி விலகினார். கோட்டபய ராஜபக்ஷவை பதவி விலக்க செயற் பட்டவர்கள் தாம் இறக்கும் தருணத் தில் அதற்காக வேதனையடை வார் கள். நாட்டை ஆட்சி செய்த அரச தலை வர்களில் ஊழலற்ற அரச தலை வரா கவே கோட்டபாயராஜபக்ஷ செயற்பட்டார்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அடிப்படைவாதிகள் அனைவரும் ஒன்றிணைந்து அவரை பதவி விலக் கிறார்கள். பொய்யான குற்றச்சாட்டுக் களை தொடர்ந்து முன்வைத்தால் அத ற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்றார். (ம)

# இங்கிலாந்தை வீழ்த்திய இலங்கை மகளிர் அணி



சர்வதேச மகளிர் இருபது- 20 கிரிக்கெட் வரலாற்றில் இங்கிலா ந்தை இலங்கை வெற்றி கொண் டது இதுவே முதல் தடவையாகும்.

நியூஸிலாந்துக்கு எதிராக சில மாதங்களுக்கு முன்னர் நடை பெற்ற மகளிர் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் 2 - 1 என்ற ஆட்டக் கணக்கில் முதல் தடவையாக வெற்றி பெற்று இலங்கை வரலாறு படைத்திருந்தது.

செல்ஸ்ஃபோர்ட் விளையாட்டரங்கில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற 2 ஆவது மகளிர் சர்வதேச இருபது -20 கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்தை 8 விக் கெட்டுகளால் வெற்றி கொன்டு இலங்கை வர லாறு படைத்தது.

இங்கிலாந்தினால் நிர்ண யிக்கப்பட்ட 105 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை, சமரி அத்தபத்து வின் அதிரடி அரை சத்த த்தின் உதவியுடன் இலகு வாக வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (6)

## சர்வதேச...

விசாரணை ஒன்றே அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில், நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்தபோதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்கு தல்கள் நடத்தப்பட்ட நிலையில் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் நானும் போட்டியிட்டேன். அப்போது கோட்டாபய ராஜபக்ஷ வுக்கே வாக்களிக்குமாறு பேராயர் கர் தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்தார். அவர் எனக்கு எதிராக வாக்களிக்குமாறு தெரிவித்த மையை நான் பொருட்படுத்தவில்லை என்றார். (ம)

கொழும்பு விலையில்...
யாழ் நகரில் கோழிகள் விற்பனைக்கு உண்டு
புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ்
ஊர்க்கோழி, சேவல், விறாத்து குஞ்சுகள்
மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.
முட்டைகள் அனைத்தும்
ஒரே இடத்தில் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
(சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்)
நியூ சிற்றி பாம்
நியூ சிற்றி கோழிக்கடை
இல.8, சின்னக்கடை
மார்க்கெட்
குருநகர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் வேலை நிறுத்தத்தில் குதிப்போம்

## தொழில் வல்லுநர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால், கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை தொழில் வல்லுநர்கள் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டிற்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் முதல் மதிப்பாய்வை நடத்துவதற்காக, செப்டெம்பர் 15 ஆம் திகதி ஐ.எம்.எப் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு முன்னதாகவே அரசாங்கத்திற்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் வழங்கிய எழுத்துமூல உறுதிமொழிக்கு அமைய ஜனாதிபதி செயற்பட வேண்டும் என பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் பேச்சாளரான சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்தே இளங்கசிங்க, 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரிவிதிப்பு முறைமையில் திருத்தம் செய்யப்படும் என ஜனாதிபதி விக்கிரமசிங்க உறுதியளித்திருந்த போதிலும் அது நடைபெறவில்லை.

வரிப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வை வழங்கத் தவறும் பட்சத்தில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தள்ளப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (நி-5)




## நாடி வந்தோம் நலம் தருவாய்

நல்லைநகர் கந்தனே நீள்வேல் கரமேந்தி
நாடிவரும் அடியவர்க்கு நலம் தரும் ஆறுமுகா
அல்லல் பல கண்டு அமைதி தானிழந்து
ஆலய வாயிலிலே நீறணிந்து கரம் கூப்பி
வல்வினை தீர்ந்திட வருவோர் உளம் குளிர
வாழ்வும் வளமாகும் அழகனின் அருளாலே
நல்லைக் கந்தனே நெஞ்சில் உறைபவனே
நாடியுனை வந்தோம் நலம் தா முருகா

"கலாபூசணம்"
கே.ஆர்.திருத்துவராஜா.

## மனம் உருகி நிற்கின்றோம்

ஐ ஐந்து தினங்கள் திருவிழாக் காணும்
நல்லூரானே
வையகத்தில் நாங்கள் வளமாக வாழ்வதற்கு
அருள் புரிய வேண்டும் முருகா எம்மன
இருள் நீக்கிடுவாய் மாலவன் மருகா
மன்றாடித் துதிக்கின்றோம் மனமுருகி
நிற்கின்றோம்

எஸ்.கே.மனோகரன்,
சுன்னாகம்.

# உயர்தரப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறும்

## கல்வி அமைச்சர் திட்டவட்டம்



(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை(2023) ஒத்திவைக்கப்படுவதனால் சாதாரணதரப் பரீட்சைகள் மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை பாடத்திட்டத்தின் நிறைவு பாதிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். இதன் காரணமாக உயர் தரப் பரீட்சைகளை ஒத்தி வைக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சைகளை ஒத்திவைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, சரத் வீரசேகர உள்ளிட்ட அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், உயர்தரப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறும் எனவும் அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தேர்வுகளை மீண்டும் எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு இது நியாயமற்றது எனவும் மீண்டும் வரும் மாணவர்கள் தேர்வுக்குத் தயாராகும் நேரம் போதுமானதாக இல்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நிலக்கரி அனல்மின் நிலையங்களை நாட்டில் நிர்மாணிப்பதில்லை-காஞ்சன

(கொழும்பு)

இலங்கையில் நிலக்கரி அனல்மின் நிலையங்களை நிர்மாணிப்பதில்லை என அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான சட்ட மூலம் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அறிவித்துள்ளார்.

மேலும் அவர், சம்பூரில் நிலக்கரி அனல்மின் நிலையத்தை அமைக்கும் திட்டத்திற்கு பதிலாக சூரியசக்தி மின் நிலையம் அமைக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)


# இராசிபலன்

06.09.2023
ஆவணி 20, புதன்கிழமை
சப்தமி முன்னிரவு 9.10 மணிவரை


கார்த்திகை பிற்பகல் 3.24 மணிவரை
சுபநேரம் -4.34-6.04 மணிவரை
இராகுகாலம்-12.04-1.34 மணிவரை விரதம்
அமிர்த சித்தம், ஸ்ரீகிருஷ்ணஜெயந்தி.

சந்திராஷ்டமம்-
சித்திரை, சுவாதி.


வளவன்





காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், திருமண முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, வாக்கு மேன்மையுண்டு.




வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் சுணக்கம் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.





பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுபசெய்திகள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.





உடல் நலம் சீராக உணவில் கட்டுப்பாடு தேவை, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.





உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழிலில் உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படும் நாள்.





தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.




நண்பர்கள் வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.





காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், மனச்சஞ்சலங்கள் சற்று கூடும்.




பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




தொழில் முயற்சியில் எதிர்பார்த்த திருப்பங்களைக் காணலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள்.

வாழ்வில் இன்பம், துன்பம் மாறி மாறி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான கண்புரை சத்திர சிகிச்சையினை யாழ். போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களுக்கான சத்திர சிகிச்சைகள் கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மலரவனது குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் குருநகர் பிரதேச வைத்திய சாலையில் இடம்பெறவுள்ளது. அதேபோன்று நல்லூர் சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவ முகாம் அதே திகதியில் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மஞ்சவனப்பதி ஆலய திருமண மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில் கண் புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத் தரப்படும்.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனைமுகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (நி-6)

# மின் ஒழுக்கால் தீப்பற்றிய வீடு



(யாழ்ப்பாணம்)

வசாவிளான் பகுதியில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட மின் ஒழுக்கால் குறித்த வீடு எரிந்து அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளது.

குறித்த வீட்டுக்கு மின் இணைப்பு வழங்கப்படாத நிலையில், அந்த வீட்டில் வசித்து வந்த இளம் குடும்பம் ஒன்றுக்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் குழந்தை பிறந்ததால், அயல் வீட்டார் உதவும் நோக்குடன் மின்சாரத்தை தமது வீட்டில் இருந்து வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் நேற்று முன்தினம் யாரும் இல்லாத நேரத்தில் வீடு திடீரென தீப் பிடித்து எரிவதனை அவதானித்த அயலவர்கள் தீயை கட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த போதிலும் வீட்டில் இருந்த பெறுமதியான பொருட்களும் முக்கிய ஆவணங்களும் தீயில் எரிந்து கருகியுள்ளன. சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

# வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகள் பொதுமக்களுக்கு நேற்று பகிர்ந்தளிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு அன்ரனி புரத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட அரச காணிகள் பொதுமக்களுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

குலுக்கல் முறையில் காணிகளை தெரிவு செய்து பயனாளர்களுக்கு வழங்கி வைத்த நேற்றைய நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச செயலாளர் சிவஸ்ரீ, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர் செல்வி. சாந்தாதேவி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சிவகுரு பாலகிருஷ்ணன் மற்றும் கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள், அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் நீண்டகாலமாக அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்ற வலி. வடக்கை பூர்வீகமாக கொண்ட சுமார் 49 குடும்பங்களுக்கு தலா ஒன்றரை பரப்பு வீதம் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

குறித்த பிரதேசம் உயர் பாதுகாப்பு பிரதேசமாக இருந்து வந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் கடந்த பெப்ரவரி மாதமளவில் விடுவிக்கப்பட்டதுடன், அந்த அரச காணிகளை முகாம்களில் வாழும் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளும் அமைச்சரினால் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ். நகர் 11 சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளன.

அந்த வகையில் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணி - 11 மணி வரை அத்தியடி பிள்ளையார் கோவிலடி. மு.ப 11 - பி.ப 1 மணி வரை ஸ்ரான்லி வீதி பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாகவும் பி.ப 2.30 - பி.ப 4மணி வரை நாவலர் வீதி நாவலர் மண்டபத்திலும் 19 ஆம் திகதி காலை 9 - மு.ப 11 மணிவரை இராசாவின் தோட்ட வீதி ஸ்ரான்லி வீதி சந்தி, மு.ப 11 - பி.ப 1 மணி வரை கோவில் வீதி றக்கா வீதி சந்தி, பி.ப 2.30- பி.ப 4 மணிவரை மருதடிலேன் வைரவர் கோவிலடியிலும் 20 ஆம் திகதி காலை 9- மு.ப 11 மணிவரை நல்லூர் தெற்கு சனசமூக கற்பக பிள்ளையார் கோவிலடி, மு.ப 11 -பி.ப 1 மணிவரை றக்கா வீதி இளம் சிங்கம் சனசமூக நிலையம். பி.ப 2.30 -பி.ப 4 மணி வரை கோவில் வீதி ஆஸ்பத்திரி வீதியிலும் 21 ஆம் திகதி காலை 9 - மு.ப 11 மணிவரை மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம், மு.ப 11 -பி.ப 1 மணி வரை அருள் மாதா கோவிலடி ராசாவின் தோட்டம், பி.ப 2.30 - 4 மணிவரை மாட்டீன் வீதி சப்பல் வீதி சந்தியிலும் 22 ஆம் திகதி காலை 9 - மு.ப 11 மணி வரை 2 ஆம் குறுக்குத் தெரு வேம்படி வீதி யாழ்ப்பாணம், மு.ப 11 -பி.ப 1 மணி வரை OLR தேவாலயம் 4 ஆம் குறுக்குத் தெரு, பி.ப2.30- பி.ப 4 மணி வரை யாழ். புகையிரத நிலைய வீதி வைரவர் கோவிலடியிலும் 25 ஆம் திகதி காலை 9 - மு.ப 11 மணி வரை கோயில் வீதி ரயில் தண்டவாள சந்தி, மு.ப 11- பி.ப 1 மணிவரை ஆஸ்பத்திரி வீதி, கோயில் வீதி சந்தி, பி.ப 2.30 -பி.ப 4 மணி வரை சோமசுந்தரம் வீதியிலும் 26 ஆம் திகதி காலை 9- மு.ப 11 மணி வரை பழைய பூங்கா பகுதி, மு.ப 11 - பி.ப 1 மணிவரை சுவாஸ் லேன், பி.ப 2.30- பி.ப 4 மணிவரை கொழும்புத் துறை வீதி விதானையார் வீதி சந்தியிலும்.

27 ஆம் திகதி காலை-9 மு.ப 11 மணிவரை சந்தனமாதா கோவில் பகுதி, மு.ப 11 -பி.ப 1 மணிவரை கச்சேரி கிழக்கு ஒழுங்கை, பி.ப 2.30 - பி.ப 4 மணி வரை குருசோ வீதி கிறின் பில்ட் வாசிகசாலையிலும் எதிர்வரும் 2.10.2023 காலை 9- பி.ப 11 மணி வரை மத்தியூஸ் வீதி சென் சாள்ஸ் ஆரம்ப பாடசாலை, மு.ப 11 - பி.ப 1 மணிவரை காட்டுக் கந்தோர் ஒழுங்கை, பி.ப 2.30- பி.ப 4 மணி வரை கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச் சந்தி ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளன.

மேலும் ஒரு நாய்க்கான உரிமக் கட்டணமாக 50 ரூபாய் அறவிடப்படும் என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (நி-6)


## பெறுகை அறிவித்தல்
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

தலைவர் பெறுகைக் குழு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அவர்களினால் 01.10.2023ஆம் திகதி தொடக்கம் 31.03.2024ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநரிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | ஆளணி எண்ணிக்கை | பெறுகை பிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | தொகை | காலம் |
| NP/14/45(3)/1/OS/2023/02 | சுகாதாரச் சேவை | 04 | 6,000.00 | 06.12.2023 |

1. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாகவே இக்கேள்வி கோரப்படுகின்றது.
2. தனியார் சேவை வழங்குநர்கள் சேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 02 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை, தொலைபேசி இலக்கம் 024 324 3544 தொலைநகல் 0212050036 மின்னஞ்சல் **pallaips@gmail.com** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாட்களில் **06.09.2023** தொடக்கம் **20.09.2023** ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை பெறுகை ஆவணங்களைப் பார்வையிடலாம்.
5. சேவை வழங்குநர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் **06.09.2023** தொடக்கம் **20.09.2023** ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணமாக ரூபா 2,000 (**VAT,NBT** நீங்கலாக) இனைச் செலுத்தி பெறுகை விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.
6. கேள்வி ஆவணங்கள் **21.09.2023** ஆம் திகதி **மு.ப 10.30** மணிக்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியவாறு தலைவர், பெறுகைக்குழு, பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைப் பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம் எழுதப்படல் வேண்டும்.
8. பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.
9. கிடைக்கப் பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.
10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் **14.09.2023** ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ள முடியும்.

திருமதி.தர்சினி தயானந்தன்,
தலைவர்,
பெறுகைக்குழு,பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை. 06.09.2023

(நி-7197)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 தொழுநோயாளர்கள் இதுவரை அடையாளம் அறிகுறிகள் தென்பட்டால் மருத்துவரை நாடவும்

## சுகாதார துறையினர் அறிவுறுத்து

(கொழும்பு)

தொழுநோய் தொடர்பில் அச்சம் தேவையில்லை. சிகிச்சை மூலம் நோயை குணப்படுத்த முடியும் என தொற்று நோய் நிபுணர் வைத்தியர் பீ.ஜி. ஒபாஷா எம்.ஐ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

அருகில் உள்ள மருத்துவமனைக்கு சென்று மருத்துவ ஆலோசனை பெற்று சிகிச்சை பெறும்படி சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வருடம் பொலநறுவை மாவட்டத்தில் ஐந்து பாடசாலை மாணவர்கள் உட்பட 22 பேர் தொழு நோயினால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் வரையான காலப் பகுதியில் புதிதாக கண்டறியப்பட்ட 22 தொழுநோயாளிகளும் கடந்த ஆண்டு கண்டறியப்பட்ட மூன்று நோயாளிகளும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (நி-5)

# தோல்வி பயத்தால் அரசாங்கம் தேர்தலை நடத்தாது

## உதய கம்மன்பில



(கொழும்பு)

தோல்வி பயம் காரணமாக அரசாங்கம் தேர்தலை நடத்தாது என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரணில் விக்கிரமசிங்கவும் அவருடைய மாமாவான ஜே.ஆர். ஜயவர்தனவும் தேர்தல் நடத்தாமல் தேர்தல் பத்திரங்களை ஒதுக்கி வைப்பதில் கின்னஸ் சாதனைக்கு சரி சமமாக உரித்துடையவர்கள். தேர்தல் வைக்க மாட்டார்கள். காரணம் அரசாங்கம் தோற்பது விருப்பம் இல்லை.

தேர்தலை எப்படியும் நடத்த மாட் டார்கள் நாம் தான் நடத்த வைக்க வேண்டும். தேர்தல் நட த்தும் வரையில் எங்கள் போரா ட்டத்தை நிறுத்த மாட்டோம்.

நாங்கள் தேர்தலுக்கு தயாராக இருக் கின்றோம். அரசாங்கம் தயாராக இல்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# வெளிநாடுகளில் பதுக்கிய சொத்துக்களை மீட்க களமிறங்கும் ஐ.நா- நீதி அமைச்சர்

(கொழும்பு)

மோசடியாக சொத்துக்களை ஈட்டி வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருக்கும் நபர்களின் பணத்தை மீட்பதற்கான உதவிகளை வழங்க போதைப் பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

இதன்படி, குறித்த பணத்தை மீட்பதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படும் என நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தின் தெற்காசிய பிராந்திய பிரதிநிதி மார்கோ டீக்சீராவுக்கும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இது தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அவ்வாறு ஈட்டப்பட்ட பணத்தை வெளிநாடுகளில் வைப்பு செய்தவர்களிடம் இருந்து பணத்தை மீட்பது தொடர்பில் உலக வங்கியின் சார்பில் போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் செயற்படுகிறது.

எதிர்வரும் 15 ஆம் திகதி புதிய ஊழல் ஒழிப்புச் சட்டம் அமுலுக்கு வரவுள்ள நிலையில் புதிய இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவும் அவ்வாறானவர்கள் தொடர்பில் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். (நி-5)

# மின்சாரசபையில் பணியாற்றும் 24 ஆயிரம் ஊழியர்களுக்கு சிக்கல்

## எரிசக்தி அமைச்சர் அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பான சட்டமூலம் அடுத்த மாதம் சபையில் சமர்ப்பிக்கப்படும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியின் பின்னர் குறித்த சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மின்சார சபையில் பணியாற்றும் 24000 ஊழியர்களின் வினைத்திறன் தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுவதாகவும் தேவையான இடங்களில் ஊழியர்களை குறைக்க வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரி வித்தார். சில சேவைகள் வெளியில் இருந்து ஆட்சேர்ப்பு செய்யப்படுவதால் வாரியத்திற்கு பெரும் சுமை ஏற்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-5)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 13 – 08 – 1962



விண்ணில் 07 – 08 – 2023

திருமதி. நவரத்தினம் புஸ்பராணி

யாழ்ப்பாணம் சங்கானையை பிறப்பிடமாகவும் சிலாவத்தை முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கடந்த 07.08.2023 (திங்கட் கிழமை) சிவபதமடைந்த எமது குலதெய்வம்.

அமரர். **நவரத்தினம் புஸ்பராணி** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 04.09.2023 (திங்கட் கிழமை) கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிரியைகள் 06.09.2023 இன்று புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத் தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதமும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் எம்முடன் பல வழிகளிலும் துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இன்றுவரை எமக்கு பல உதவிகளையும் செய்து தந்த அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-7195)

இல.44 மாதிரிக்கிராமம்,
சிலாவத்தை,
முல்லைத்தீவு.

இங்ஙனம்- மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்
தகவல்- மூத்த மருமகன் வே.இராசநாயகம் குடும்பத்தினர்
077 6696 200, 076 363 5041


# ஆறுகளில் நீர்மட்டம் உயர்வு

(கொழும்பு)

களு, கிங், நில்வள கங்கை மற்றும் அத்தனகலு ஓயா ஆகியவற்றின் நீர் மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த கங்கைகளின் தாழ்வான பகுதிகளில் நீர் மட்டம் இன்னும் அதிகமாகவே காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் ஏனைய பகுதிகளில் குறிப்பாக தென்மேற்கு பகுதிகளில் கணிசமான மழை வீழ்ச்சி இல்லாத காரணத்தினால் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் அதிகரிக்க வில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 600 | 500 | 500 |
| தக்காளி | 160 | 130 | 140 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 150 | 200 | 250 |
| கரட் | 380 | 300 | 350 | 350 |
| பூசணி | 80 | 100 | 80 | 80 |
| புடோல் | 100 | 80 | 100 | 120 |
| வாழைக்காய் | 200 | 240 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 220 | 200 | 240 |
| பாகற்காய் | 400 | 350 | 300 | 300 |
| வெண்டக்காய் | 80 | 120 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 150 | 100 | 150 |
| லீக்ஸ் | 200 | 140 | 200 | 200 |
| பீற்றூட் | 160 | 120 | 140 | 150 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 200 | 200 |
| போஞ்சி | 400 | 300 | 200 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 120 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 700 | 650 | 800 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 350 | 400 | 350 |
| வெங்காயப்பூ | 240 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 60 | 60 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

முகநூல் தரிசனம் 194

# உதவி செய்யும் மனம் தான் கடவுள்

பூட்டிய கிரில்லுக்கு அப்பால். ஒரு பெரியவர். கசங்கிய சாதாரண வேட்டி சட்டை. முகத்தில் கறுப்பும் வெள்ளையுமாக மண்டிய ரோமக் காடு. நீண்ட பயணத்தால் களைத்த முகம் என கையில் நகைக்கடை விளம்பரத்துடன் இருந்த ரெக்சின் பையுடன் நின்றிருந்தார்.

அவர் கையிலிருந்த சீட்டைப் பார்த்தார் ஆனந்த். நம்பர். 8. யோகானந்தம் நகர்? ஆமாம் இதுதான். நான் தான் ஆனந்த். நீங்க என்ன வேணும்? அவர் வறண்ட உதடுகளை. நாவால் ஈரப்படுத்திக் கொண்டார்.

நான் உங்கப்பாவோட நண்பன் காரைக்காலிலே இருந்து வாறேன். உங்கப்பா லெட்டர் கொடுத்து அனுப்பியிருக்கார்.பெரியவர் ரெக்சின் பை ஜிப்பை திறந்து. ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார்.

வாங்கிப் பார்த்த ஆனந்த். அப்பாவா? என்று வினவியபடி. கடிதத்தைப் படித்தான்.

அதில்: "அன்புள்ள ஆனந்துக்கு. அப்பா எழுதுவது. ஆசீர்வாதம். கடிதம் கொண்டு வரும் ராமசாமி. என் நண்பன். ரொம்ப கஷ்ட ஜீவனம். இவரது ஒரே பிள்ளை. சமீபத்தில் விபத்தில் இறந்து விட்டான். விபத்துக்கான இழப்பீடு கிடைத்தால் ராமசாமியும் அவர் மனைவியும் வாழ ஓரளவாவது உதவியாக இருக்கும். விபத்து சம்பந்தமான பொலிஸ் விசாரணை. விபத்து ஏற்படுத்திய டிராவல்ஸ் வான் உரிமையாளர் தர ஒப்புக் கொண்ட இழப்பீடு போன்ற சகல விபரங்களையும் சேகரித்து அவரிடம் கொடுத்தனுப்பி இருக்கிறேன். சென்னையில் தலைமை அலுவலகத்தில் தருவார்களாம். சென்னை அவருக்கு புதிது. நீ கொஞ்சம் அவருக்கு உதவி செய்தால் நல்லது. செய்வாய் என்று நம்புகிறேன். மற்றபடி உடம்பைப் பார்த்துக் கொள். பொங்கலுக்கு கண்டிப்பாக ஊருக்கு வர வேண்டும். உன் அப்பா பரமேஸ்வரன்." என்று எழுதப்பட்டிருந்தது.

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார் ராமசாமி.

வாங்க சார். உட்காருங்க.என்றவன் டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். தயங்கியபடி உள்ளே வந்த ராமசாமி. தண்ணீரை வாங்கிப் பருகினார்.

ஆனந்த். நான்கு தோசை சுட்டு. மிளகாய்ப் பொடி. எண்ணெய். தண்ணீர் கொண்டு வந்து. டேபிள் மேல் வைத்தான். சாப்பிடுங்க. இதோ வர்றேன் என்றவன். வாசல் பக்கம் மொபைலுடன் போனான். திரும்பி வந்த போது. சாப்பிட்டு முடித்து. கை நிறைய பேப்பர்களுடன் காத்திருந்தார் ராமசாமி.

சொல்லுங்க. என்ன நடந்தது? என்று. அவர் எதிரில் அமர்ந்தான். என் மகனுக்கு மகேஷ்ன்னு பேர். கஷ்டப்பட்டு படிக்க வெச்சேன். பொறுப்பான பிள்ளை. ஸ்கொலர்ஷிப்லேயே பி.இ முடிச்சான். வேலை கிடைச்சுட்டா. நம்ம கஷ்டம் தீர்ந்திடும்ன்னு வாய்க்குவாய் சொல்வான். வேலையும் கிடைச்சுது. என்னையும் என் மனைவியையும் நிற்க வச்சு நமஸ்காரம் செய்துட்டு மெட்ராஸ் கிளம்பினான். பஸ் ஸ்டாண்ட் போக ரோடு கிராஸ் செய்யறப்போ வேகமா வந்த டிராவல் வான் மோதி. ஸ்பாட்லேயே மேல் துண்டால் முகத்தை மூடி. குலுங்கினார் ராமசாமி. பேசாமல் அவரையே பார்த்தான் ஆனந்த்.

அந்த வான் சொந்தக்காரர். நஷ்ட ஈடு தர ஒத்துக்கிட்டார். முதல்லே அதை வாங்கவே மனசு ஒத்துக்கல. எனக்கு நிரந்தரமா ஒரு வேலையும் கிடையாது. என் மனைவி ஏற்கனவே நோயாளி. பிள்ளை போன துக்கத்திலே படுத்த படுக்கையாயிட்டா. எங்களை பகவான் அழைச்சுக்கற வரை சாப்பிட்டுத் தொலைக்கணுமே. அதனாலே. கடைசியா நஷ்டஈடு வாங்கிக்க சம்மதிச்சேன். உங்கப்பா தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து இங்கே அனுப்பி வைச்சார். என் பிள்ளை உங்களுக்கு உதவி செய்வான்னு லெட்டர் கொடுத்தார்.

செய்யறேன். கண்டிப்பா உதவி செய்றேன் என்று எழுந்தவன். அவர் படுக்க. பாயும் தலையணையும் கொடுத்தான்.

இருவருமாக பைக்கில் கிளம்பினர்.

இங்கே நுங்கம்பாக்கம்ன்னு இருக்காமே. அங்கே தான் ஹெட் ஆபீஸ் இருக்காம்.

நுங்கம்பாக்கம் பக்கம் தான். நான் கூட வந்து செஞ்சு தர்றேன்.

வழியில் ஹோட்டலில் டிபனை முடித்து. டிராவல் ஆபீஸ் வந்தனர்.

பார்மாலிடீஸ் எல்லாம் முடித்து. செக் கைக்கு வர மத்தியானம் ஆகிவிட்டது.

ரொம்ப நன்றிப்பா. எனக்காக ரொம்ப சிரமப்பட்டுட்டே. நான் இப்படியே ஊருக்கு கிளம்பறேன். இப்ப பஸ் புடிச்சா. ராத்திரிக்குள்ளே காரைக்கால் போயிடலாம்.

நானே பஸ் ஏத்தி விடுறேன் வாங்க என்றான்.

கோயம்பேடு வரை பைக்கில் அழைத்துச் சென்று காரைக்கால் பஸ்ஸில் ஏற்றி விட்டான். டிக்கட் வாங்க என்று ஐந்நூறு ரூபாவை பிடிவாதமாக அவர் சட்டைப் பையில் திணித்தான்.

ஒரு நிமிடம் என்று போனவன் ஒரு பிளாஸ்ரிக் பையுடன் வந்தான்.

ஊர் போய்ச் சேர எத்தனை நேரம் ஆகுமோ. வழியிலே சாப்பிட்டுக்குங்க என்று டிபன் பொட்டலம். தண்ணீர் பாட்டில் அடங்கிய பையை அவரிடம் கொடுத்தான்.

அவர் நெகிழ்ந்தார்.

ஊருக்கு போனதும் முதல் வேலையா உங்கப்பாவைப் பார்த்து நன்றி சொல்லணும்.

ராமசாமி உணர்ச்சிவசப்பட்டு பேசிக் கொண்டே போக அமைதியாக அவர் பக்கத்தில் அமர்ந்தான் ஆனந்த்.

ஒரு விடயம் சார். நீங்க தேடி வந்த ஆனந்த் நான் இல்லே. ராமசாமி திடுக்கிட்டார். என்னப்பா சொல்றே? ஆமாம். நீங்க அட்ரஸ் தப்பா வந்துட்டீங்க.நீங்க மெயின் யோகானந்தம் நகர் போயிருக்கணும். அது கிட்டத்தட்ட 2 கி.மீ தொலைவில இருக்கு.ராமசாமிக்கு. "குப்"பென வியர்த்தது. அடடா தப்பு செய்துட்டேனே. ரொம்ப ரொம்ப சாரிப்பா. நீ. நான் வந்தவுடனேயே சொல்லியிருக்கலாமே. அநாவசியமா எதுக்கு எனக்காக மெனக்கட்டு...அவரைத் தடுத்தான் ஆனந்த்.

நீங்க மெட்ராசுக்கு புதுசு வேற. அதிலேயும் நீங்க வந்த காரியத்தைப் பற்றி தெரிஞ்சதுலே எனக்கு மனசு சங்கடமா போயிட்டது

அதான் உங்களைச் சாப்பிடச் சொல்லிட்டு லெட்டர்லே இருந்த நம்பருக்கு கால் போட்டு பேசினேன். நீங்க அட்ரஸ் மாறி வந்த விடயம் கேட்டு. உங்க நண்பரிடம் அவர் பிள்ளையோட நம்பர் கேட்டு வாங்கிப் பேசிட்டு பொழுது விடிஞ்சதும் ஒரு ஆட்டோவிலே உங்களை அனுப்பி வைக்கலாம்ன்னு இருந்தேன்.

ஆனா மொபைல் போன்ல பேசினது ஆனந்தோட மனைவி. அவர் ஆபீஸ் விடயமா டில்லி போயிருக்காராம். வர ஒரு வாரம் ஆகுமாம். அப்பதான் முடிவு செய்தேன். நேரடியா நானே உங்களுக்கு உதவி செய்திடலாம்ன்னு. நஷ்ட ஈடு உங்களுக்கு கிடைக்க. நான் உதவியா இருந்தேனேன்னு நிம்மதி என் மனசிலே நிறைஞ்சு இருக்கு. அது போதும் சார்.


டிரைவரும் கண்டக்டரும் பஸ்ஸில் ஏற எழுந்தான் ஆனந்த்.

அவன் கைகளைப் பற்றி கண்ணில் ஒற்றிக் கொண்டார் ராமசாமி. அவன் உள்ளங்கை ராமசாமியின் கண்ணீரால் நனைந்தது. "நல்லா இருப்பா... நல்லா இரு..." வேறென்ன சொல்றது?

பதினைந்து வருடங்களுக்கு முன் செத்துப் போன தன் அப்பாவை நினைத்துக் கொண்டான்.

கனத்த மனதுடன். பஸ்ஸை விட்டு இறங்கினான் ஆனந்த்.

# யுரேனிய சேகரிப்பை குறைத்து வரும் ஈரான்



(டெஹ்ரான்)

உலக நாடுகளுடன் ஈரான் செய்து கொண்ட அணு ஆயுத ஒப்பந்தத்தை மீறும் விதமரக சில வருடங்களாக அந்நாடு செயற்பட்டு வந்தது.

மேற்காசிய நாடான ஈரான், அணு சக்தியை அமைதி வழிக்கே பயன்படுத்துவதாக தெரிவித்து வந்தது. ஆனால், சர்வதேச அணு சக்தி அமைப்பு இதனை ஏற்க மறுத்தது. தேவைப்பட்டால் உடனடியாக அணு ஆயுதங்களை உருவாக்கிக் கொள்ளும் வகையில் போதுமான அளவு செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஈரான் சேமித்து வைத்துள்ளதாக இந்த அமைப்பு கூறி வந்தது. 2015 இல் உலக நாடுகளுடன் ஈரான் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி அதிகபட்சமாக 202.8 கிலோகிராம் அளவு யுரேனியம் மட்டுமே அந்நாடு சேகரித்து வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டு இருந்தது.

இதனால் அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே பதற்றம் நிலவி வந்தது. சமீபத்தில் இதை தணிக்கும் விதமாக இரு நாடுகளும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டன. அதன்ப
இரு நாட்டி
சிறைகளிலும் உள்
தங்கள் நாட்
கைதிகளை பரி மா
றம் செய்து கொள்
வும், தென் கொரி
வங்கிகளில் முடக்
வைக்கப்பட்ட ஈர
னுக்கு சொந்தமா
பல நூறு கோடிகளை
விடுவிக்கவும் அமெ ரிக்கா ஒப்புக் கொ
டால், ஈரான் தனது அணு ஆயுத முயற்
களை மட்டுப்படுத்தி கொள்வதாக கூ
இருந்தது. இந்நிலையில், ஈரானி
அணு சக்தி திட்டங்கள் மற்றும் செய
பாடுகள் குறித்து சமீபத்தில் சர்வதே
அணு சக்தி அமைப்பு ஒரு ஆய்வறிக்
வெளியிட்டுள்ளது.

அதன்படி, கடந்த பெப்ரவரியில் 87.
கிலோகிராம் எனும் அளவிலும் பிறகு
மாதம் 114 கிலோகிராம் எனும் அளவிலு
இருந்த 60 சதவீதம் செறிவூட்டப்பட்
யுரேனிய சேகரிப்பு, தற்போது 121.
கிலோகிராம் எனும் அளவிலே
உள்ளது.

யுரேனிய சேகரிப்பை ஈரா
குறைத்துள்ளதாக இந்த ஆய்வறிக்
தெரிவிக்கிறது. ஒரு அணு ஆயுதத்
பரிசோதனை செய்ய தேவைப்படு
எந்தவிதமான அணு ஆயுத நடவடிக்
களிலும் ஈரான் ஈடுபடவில்லை எ
அமெரிக்க உளவு அமைப்புகள் கடந்
மார்ச் மாதம் கூறி வந்தன. ஆயுத மட்
அளவிலான யுரேனியம் என்பது 9
சதவீதம் செறிவூட்டப்பட்டதாகும். 6
சதவீதம் செறிவூட்டப்பட்ட யுரேனிய
இதிலிருந்து சற்றே குறைவானது என்ப
குறிப்பிடத்தக்கது. (நி-5

# ஈரானில் நிலக்கரி சுரங்கத்தில் வெடிவிபத்து 6 பேர் உயிரிழப்



(டெஹ்ரான்)

ஈரானில் டாம்கான் நக ரில் உள்ள சுரங்கம் ஒன் றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடிவிப த்தில் சிக்கி 6 பேர் உயி ரிழந்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

சுமார் 400 மீற்றர் ஆழத் தில் உள்ள சுரங்கப் பாதையில் ஏற்பட்ட இந்த வெடிவிபத்தில், சுரங்கத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளதாகவும் இதனால் அப்பகுதியில் 6 தொழிலா
ளர்கள் வெளியேற முடியாமல்
சிக்கி அங்கேயே உயிரி
ந்துள்ளனர் எனவும் தெரிவி
கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று
காலை குறித்த 6 பேரின்
உடல்களும் மீட்கப்பட்டுள்
தாகவும் இவ்விபத்துக் குறித்
தீவிர விசாரணைகள் மு
னெடுக்கப்பட்டு வருவதாகவு
தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் மீதான போருக்கு மத்தியில்

# ரஷ்யா- வடகொரியா இடையே ஆயுத ஒப்பந்தம்

## புடினை சந்திக்கிறார் கிம் ஜாங் உன்



(கீவ்)

**வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் இம்மாதம் ரஷ்யாவுக்கு பயணம் மேற்கொள்ள உள்ள நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்து உக்ரைன் போருக்கு ஆயுதங்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிக்க உள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.**

ரஷ்யா-வடகொரியா நாடுகள் இடையே ஆயுத ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இது தொடர்பான செய்தியை அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் ஊடகம் வெளியிட்டுள்ளது. கிம் ஜாங் உன், ரஷ்யாவுக்கு ஆயுதம் தாங்கிய வீரர்கள் பாதுகாப்புடன் ரயிலில் பயணம் மேற்கொள்ள இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு நாட்டு தலைவர்கள் எந்த இடத்தில் சந்தித்து பேசுவார்கள் என்று தெளிவான விபரம் கிடைக்கவில்லை.

ஆனால் பசுபிக் துறைமுக நகரமான விளாடிவோஸ்டாக்கில் இந்த சந்திப்பு நடைபெறலாம். இதுகுறித்து அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தி தொடர்பாளர் அட்ரியன் வாட்சன் கூறும்போது, கடந்த மாதம் ரஷ்ய பாதுகாப்புத்துறை மந்திரி செர்ஜி ஷோய்கு வடகொரியாவுக்கு பயணம் செய்தார். அப்போது ரஷ்யாவுக்கு பீரங்கி வெடி மருந்துகளை விற்க வடகொரியாவை வலியுறுத்தினார். இந்த ஆயுத ஒப்பந்த பேச்சுவார்த்தையை தலைவர்கள் அளவில் தொடர கிம் ஜாங் உன் எதிர்பார்க்கிறார் என்று எங்களுக்கு தகவல் கிடைத்தது.

ரஷ்யாவுடன் ஆயுத பேச்சுவார்த்தைகளை நடத்த மாட்டோம். ரஷ்யாவுக்கு ஆயுதங்களை வழங்கவோ அல்லது விற்கவோ கூடாது என்று வடகொரியா அளித்த பொது உறுதிமொழிகளும், கட்டுப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்துகிறது என்றார்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் அந்நாட்டுடன் வடகொரியா ஆயுத ஒப்பந்தம் மேற்கொள்ள இருப்பதாக வெளியுறவு தகவலால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது

ரஷ்யா பாதுகாப்பு மந்திரி, வடகொரியாவுக்கு சென்றபோது புடினும், கிம் ஜாங் உன்னும் அவர்களது கடிதங்களை மாற்றி கொண்டதாக வெள்ளை மாளிகை கடந்த வாரம் தெரிவித்து இருந்தது. அதேபோல் ரஷ்யா-வடகொரியா இடையே ஆயுத பேச்சுவார்த்தைகள் தீவிரமாக முன்னேறி வருவதாக வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு அதிகாரி ஜான் செர்பி கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# மறைந்த பிரித்தானிய அரசி எலிசபெத்தின் நிரந்தர நினைவிடம் 2026 இல் திறப்பு



(லண்டன்)

மறைந்த பிரித்தானிய அரசி இரண்டாம் எலிசபெத்தின் நிரந்தர நினைவிடம் அவரது 100ஆவது பிறந்த தினத்தையொட்டி, 2026 இல் திறக்கப்படும் என பிரித்தானிய அரசு கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

நினைவிடம் அமைப்பதற்கான திட்டத்தை வகுக்க, அரசி எலிசபெத்தின் முன்னாள் தனிச் செயலர் பிரபு ராபின்ஜான்வீரின் தலைமையிலான குழுவையும் பிரித்தானிய அரசு அமைத்துள்ளது.

பிரித்தானியாவை 70 ஆண்டு காலம் ஆட்சி புரிந்த அரசி இரண்டாம் எலிசபெத், கடந்த ஆண்டு செப்டெம்பர் 8 இல் தனது 96 ஆவது வயதில் காலமானார். இதைத் தொடர்ந்து, பிரித்தானியாவில் உள்ள விண்ட்ஸா கோட்டையில் உள்ள புனித ஜாஜ் தேவாலயத்தில் அவரது உடல் அரசுமுறைப்படி அடக்கம் செய்யப்பட்டது.

அவரது முதலாமாண்டு நினைவு தினத்தையொட்டி, பிரபுராபின் ஜான்வீரின் தலைமையிலான அரசி எலிசபெத் நினைவிடக் குழுவை அந்நாட்டின் மத்திய அமைச்சரவை அமைத்துள்ளது.

அரசியின் நிரந்தர நினைவிடம் அமைப்பது குறித்தும் ஆட்சிக் காலத்தில் அவர் ஆற்றிய சேவைகளை பிரித்தானிய மக்களுக்கு நினைவூட்டும் வகையிலான திட்டத்தை வகுப்பது குறித்தும் இந்தக் குழு பரிந்துரைகளை அளிக்கும். இதைத் தொடர்ந்து, அந்தத் திட்டத்துக்குத் தேவையான நிதி உதவிகளை அரசு வழங்கும் என மத்திய அமைச்சரவை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பிரித்தானிய துணை பிரதமர் ஆலிவர் டௌடன் கூறுகையில், 'அரசி இரண்டாம் எலிசபெத் பிரித்தானியாவில் நீண்டகாலம் அரசாட்சி புரிந்தவர். மக்களுக்குத் தனது சேவையை மிகப் பெருமளவில் வழங்கினார். எங்களுடைய நாட்டுக்கும் காமன்வெல்த் நாடுகளுக்கும் அவர் ஆற்றிய சேவைக்கு மரியாதை செலுத்துவதற்கான திட்டத்தை வகுக்கும் முக்கிய பணியை பிரபு ஜான்வீரின் தொடங்க உள்ளார் எனத் தெரிவித்தார். (நி-5)

### காபோனில் இடைக்கால ஜனாதிபதியாக

# பிரைஸ் நிகுமா பதவியேற்பு

(லிப்ரவில்)

காபோனில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நிலையில் இடைக்கால ஜனாதிபதியாக ஜெனரல் பிரைஸ் நிகுமா நேற்று பதவியேற்றுள்ளார்.

காபோனில் அண்மையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் அலி போங்கோ ஒண்டிம்பா வெற்றி பெற்றார். இதன் மூலம் 3 ஆவது முறையாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால் இத்தேர்தலில் அலி போங்கோ வெற்றி பெற்றது செல்லாது என்று போர்க்கொடி தூக்கிய இராணுவம் திடீரென கிளர்ச்சியில் ஈடுபட்டு கடந்த மாதம் 30 ஆம் திகதி ஆட்சியை கவிழ்த்ததுடன் அதிகாரத்தை கைப்பற்றியது.

இதனையடுத்து அலிபோங்கோ வீட்டுச்சிறையில் வைக்கப்பட்டார். இதன்மூலம் 55 ஆண்டுகால குடும்ப ஆட்சி முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், ஆட்சியை கவிழ்த்த இராணுவக்குழுவின் தலைவரான ஜெனரல் பிரைஸ் நிகுமா, நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக பதவியேற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஒன்லைன் மூலம் உணவுப்பொருள் விநியோகத்திற்கு பொலிஸார் தடை

(டில்லி)

டில்லியில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஜி20 மாநாடு நடைபெறவுள்ள நிலையில் பாதுகாப்பு காரணங்களுக்காக ஒன்லைன் மூலம் உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கு பொலிஸார் தடைவிதித்துள்ளனர்.

இது குறித்து பொலிஸ் சிறப்பு ஆணையர் எஸ்.எஸ்.யாதவ், கருத்துத் தெரிவிக்கையில் "டில்லி முழுவதும் தபால் மற்றும் மருத்துவ சேவைகள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள், நோயியல் ஆய்வகங்களின் மாதிரி சேகரிப்புகள் தொடர்ந்து செயற்படும்.

மாநாடு நடக்கும் நாட்களில் மருந்துகள் தவிர ஒன்லைன் டெலிவரி சேவைகள் நிறுத்தப்படும் என்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக இதுபோன்ற நடவடிக்கைகள் அவசியம்" என இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோயின் புரிதலும் புரியாத புதிர்களும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பலருக்கு எட்டாக் கனியாகவே இருக்கின்றது. வாழ்க்கையின் எந்தகால கட்டத்திலும் நோய் தெரியத்தொடங்கி வாழ்க்கையையே கேள்விக் குறியாக்கி உயிர்களைக் காவுகொள்கின்றது.

புற்றுநோயின் தாக்கம் தற்போது பரந்துபட்ட அளவில் பெண்களை பாதிக்கின்றது என்னும் செய்தி மிகவும் முக்கியமானதாக கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஆண்களும் விதிவிலக்கல்ல என்றாலும் தரவுகளின் படி பெண்களுக்கு புற்றுநோய்பரவல் அதிகமாகவே கணிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஆண்கள், பெண்கள் என்பதனைத் தாண்டி வயது வித்தியாசமின்றி சிறுவர் முதல் முதியோர் வரை பலருக்கும் புற்றுநோய் கண்டறியப்பட்டிருக்கின்றது என்பதுடன் பலரது உயிர்களை காவுகொண்டுள்ளது என்பது தான் துன்பியலான செய்தியாகும்.

இதில் பரம்பரையாக இந்த நோய் வருகின்றது என்பதை தவிர்த்துப் பார்த்தால் தவறான உணவுப் பழக்கங்கள், சுற்றாடல் பாதிப்புக்கள், புகைத்தல் மற்றும் மதுபானம் அருந்துதல் போன்றனவற்றுடன் வேறு பல காரணிகளும் புற்றுநோய் உருவாவதற்கு காரணமாகின்றன.

கடந்த மாதம் அறிவிப்பொன்று சுகாதாரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது. அதில் 25 - 35 வரையான வயடைய பெண்களுக்கு கருப்பைப் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் போன்றன அதிகளவில் ஏற்படுவதாகவும் அதனால் அண்மையிலுள்ள புற்றுநோய் கண்காணிப்பு நிலையத்திற்கு தவறாமல் சென்று தங்களை பரீட்சித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர்.

தமக்குள்ள நோய் சார்ந்த தகவல்களின் இரகசியத் தன்மை பேணப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை அதிகம் பேர் அலட்சியம் செய்வது தெரிகின்றது. புற்றுநோயின் தன்மையை கண்டறிய CA 125 என்னும் இரத்தப் பரிசோதனையும் செய்யப்படுகின்றது. முழுவதுமாக இது புற்றுநோயா? என்பதனை உறுதி செய்யா விட்டாலும் இதன் கணிப்பு களை புற்றுநோயை உறுதி செய்ய பயன்படுத்துகின்றார்கள்.

இங்கே சைவ உணவு உண்பவர்களுக்கும் இந்நோயின் தாக்கம் இருப்பது தான் புரியாதபுதிரில் ஒன்றாகும்.

பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரிந்தவர், இறுதி வரை உடற்பயிற்சியில் தினமும் உடலை உயிர்ப்பித்தவர், மரக்கறி வகைகளை உண்டவர், இறைபக்தியிலேயே இருந்தவர், குறிப்பாக தினமும் கோவா கறியென்றால் அலாதிப்பிரியம். அவருக்கு வந்தது குடல் புற்றுநோய் என்றால் கோவாவிற்கு இலையரி புழுக்களை கட்டுப்படுத்த தினமும் விசிறப்பட்ட பீடை நாசினிகளால் புற்றுநோய் வந்திருக்குமா என்னும் வினாவுக்கு இன்னமும் விடை கிடைக்கவில்லை.

விவசாயியொருவர் பீடை நாசினிகளை அந்தந்த பீடை நாசினி கம்பனிகளிலிருந்து நேரடியாகவே இறக்குமதி செய்து தினமும் அதிகாலையில் நடுகை செய்த அனைத்திற்கும் பல்துலக்க முன் ஒரு விசிறு விசிறிவிட்டு தான் மறு வேலை செய்வதாக பெருமிதம் கொண்டார்.

அவர் நடுகை செய்தவற்றில் சிறுகீரையும் வல்லாரையும் பொன்னாங்காணியும் என இலைக்கறி வகைகள் தவிர வெண்டியும் கோவாவும் பூக்கோவாவும் கத்தரியும் மிகமுக்கியமான பயிர்கள்.

இருபத்தைந்து நாள் சிறுகீரைக்கு எதற்கு இந்த விசிறல் என்றால் அப்போது தான் சந்தையில் கீரைப்பிடி பிடித்த படி கம்பீரமாக இருக்கும். தேடிவாங்குபவர் சந்தோசமாக வாங்கி செல்வார்கள் என்றார். இப் போது திருவிழாக்காலம்.

அங்கே இங்கே என பல கோவில்களிலும் திருவிழாகளை கட்டியிருக்கும் இவ்வேளையில் மரக்கறிகளுக்கும் கேள்வி அதிகம். இலாபம் அதிகம் வரும் என்னும் நோக்கில் கீரைக்கும் வல்லாரைக்கும் விசிறும் அசேதன பசளையும் பீடை நாசினியும் நுகர்வோரை அதிகம் பாதிக்கும்.

25 நாள் கீரைக்கு பீடை நாசினி தெளித்தால் தெளித்து 14 நாட்களுக்கு பின்னரேயே சந்தைப்படுத்தல் வேண்டும். அவ்வாறாயின் எப்போது விசிறி, எப்போது அறுவடை செய்வது?. இந்த சூட்சுமம் பீடைநாசினி விசிறும் விவசாயிக்கே சமர்ப்பணம்.

சிறு கீரை என்று தானே அதற்கு பெயர். ஆனால் கீரை செடியாக அல்லவா விற்பனைக்கு வருகின்றது. எப்படி இப்படி நீண்டு வளர்ந்து சதை பிடித்து தண்டு பெருத்து இலை விரிந்தது என்பது இரண்டாவது புதிர்.

அதற்காக அனைத்து விவசாயிகளையும் குறை கூற முடியாது. மக்களுக்கு நல்லனவற்றை விற்க வேண்டும் என்னும் எண்ணம் பலரிடம் இருப்பதனை அசேதன இரசாயன பசளைகளையும் பீடை நாசினிகளையும் அறவே தவிர்த்து மாடு கட்டி அதில் பயிர்செய்வதிலிருந்து கண்டு கொள்ளலாம்.

நஞ்சற்ற மரக்கறிகளை நாடுபவர்கள் இந்த விடயத்தில் அவதானம் தேவை. வீட்டில் ஒருதோட்டமிருந்தால் இவ்வகை இலைக் கறிகளை நாமே நட்டு அறுவடையும் செய்து தேவைப் படும்போது உணவாக்கலாம். தன்கையே தனக்குதவி என்பது போல தன்னையே நம்பலாமே.

ஓடியாடித் திரிந்த மழலை ஐந்தாமாண்டு பரீட்சை எடுக்கவிருந்த வேளை சுகவீனமென வைத்தியசாலைக்கு கொண்டு சென்றது தான். அங்கிருந்து இறுதியில் பெட்டியிலேயே எடுத்து வந்தார்கள். வைத்தியர்களும் வைத்தியசாலையும் எவ்வளவோ முயற்சித்தும் அந்த மழலையை காப்பாற்ற முடியவேயில்லை.

காரணம் இரத்தப்புற்றுநோய் என இறுதியாக்கினர். அரும்பெரும்பாடு பட்டு பிறந்த ஆண் குழந்தை நிமிர்ந்து எழுகையில் எதற்கு வந்தது இரத்தப் புற்று நோய்? இந்த வயதில் இப்படியொரு துன்பத்தை தந்தது ஏன்? பத்தாண்டுகள் ஓடியும் இன்னும் அந்த இழப்பை மறக்க முடியாத பெற்றோர்களுக்கு வந்த துன்பம் மூன்றாவது புதிர்?

மறைந்த மண்ணியல் ஆசான் பாணபொக்கேவின் கூற்றுப்படி யாழ்ப் பாணத்தில் அதிகமான புற்று நோயாளர்கள் இருந்தமைக்கு உணவில் இன்னும் குடிக்கும் நீரில் பாரஉலோகங்கள் இருந்தமை ஒரு காரணமா குமா என பல ஆய்வுகள் செய்யப்பட்டன. எதுவுமே அறுதியாக இது தான் புற்றுநோய்க்கான தோற்றுவாய் என கூறவில்லை. முன்மொழிவுகளாகவே முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

பார உலோகங்களுக்கும் சிறுநீரகசெயற்பாட்டுக்கும் தொடர்பு இருந்தாலும் புற்று நோய்க்கான காரணியாக இதுவும் முன்வைக்கப்படுவது சிந்திக்க வைத்துள்ளது.


உணவில் அப்படியொன்றும் இல்லை என்று தான் வாதிட்டாலும் புலால் தவிர்த்து மதுவின்றி வெற்றிலை பாக்கு புகையிலையை நாள் முழுக்க சொதப்பாத மாதர்க்கும் புற்றுநோய் கண்டிருக்கின்றது. இனப்பெருக்க தொகுதியில் வரும் புற்றுநோய்கள் இவை எவற்றிலுமடங்காதவை.

அதிலும் பெண்களின் இனப்பெருக்க தொகுதியில் குறிப்பாக குழந்தைக்கான கரு மையங்கொள்ளும் கருவறையிலும் அந்த சிசுவுக்கான உணவு தரும் மார்பகத்திலும் புற்றுநோய் உருவாவதற்காக தளம் இருக்கின்ற தென்பது விதியின் நியதியே.

சிறந்த பெறுபேறுகள் பெற்று மருத்துவர்களாக பொறியியலாளர்களாக பரிணமித்த பிள்ளைகள் உருவான கருவறை அந்ததாய்மையின்உயிரை காவுகொள்ளும் புற்றுநோய்க்கான களமாக உருவாவதை தவிர்க்க வழிகள் அவசியம் அறிந்து உணரப்படல் வேண்டும். வருமுன் காப்போம் என்னும் மகுடவாசகத்தின் உட்பொருளை அலசினால் இவ்வகை புற்றுநோய்களை ஆரம்பத்தில் கண்டறியப்பட்டால் (Early diagnosis) அவற்றிலிருந்து மீள்வதற்கு வாய்ப்புக்கள் அதிகம் என்றே புற்றுநோய் வல்லுநர்கள் தெரிவிக்கின்றார்கள்.

(தொடரும்)

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பூநகரியில் கவனயீர்ப்புப் போராட்டம்



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரியில் மதுபானசாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச பொது அமைப்புகளால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டமானது நேற்று பூநகரி சங்குப்பிட்டி வீதியின் பழைய பிரதேச செயலக வளாகம் முன்றில் இருந்து குறித்த பேரணி ஆரம்பமாகி புதிய பிரதேச செயலகம் வரை சென்றடைந்தது.

பூநகரி பிரதேசத்தின் மையப் பகுதியான வாடியடி பகுதியில் உணவகத்துடன் கூடிய மது பானசாலை ஒன்று பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் ஏற்கனவே இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் அதனை மதுபான விற்பனை நிலையமாக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனயீர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலகத்தை சென்றடைந்த பேரணியின் இறுதியில் பிரதேச செயலர் மற்றும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கான மகஜரும் கையளிக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் பூநகரி பிரதேசத்தை சேர்ந்த பொது அமைப்புகள், பெண்கள் வலை அமைப்பு, பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-315)

# வடமாகாண ஆங்கிலப் போட்டி வவுனியா மாணவி முதலிடம்

(குருமன்காடு)

வட மாகாண ஆங்கில தினப் போட்டியில் முதல் முறையாக வவுனியா வடக்கு வலய மாணவி முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தினப் போட்டிகள் நடைபெற்று அதன் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகின.

அதில், ஆங்கிலக் கட்டுரை எழுதுதல் போட்டியில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த புதுக்குளம் மகா வித்தியாலய தரம் 12 ஐ சேர்ந்த மாணவி கி.கிருசாளினி மாகாணத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா வடக்கு வலய மாணவி ஒருவர் ஆங்கில தினப்போட்டி ஒன்றில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெறுவது இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6-250)



கிளிநொச்சி பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மேலும் விழாவினை ஒட்டி மாட்டுச் சவாரி, மரதன் ஓட்டம் உட்பட பல போட்டி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(படம் - கிருஷ்ண குமார்)

# ஒதியமலைக்கான பேருந்து சேவையை ஏற்படுத்தித் தாருங்கள்

## கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒதியமலை கிராமத்திற்கு கடந்த 14 ஆண்டுகளாக பேருந்து சேவை இடம் பெறாததன் காரணமாக கிராம மக்கள், போக்குவரத்து நெருக்கடியினை எதிர் கொண்டுள்ளனர்.

75 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் பேருந்து சேவைகள் இடம்பெறாததன் காரணமாக நெடுங்கேணி மகா வித்தியாலயத்திற்கு இக்கிராமத்தில் இருந்து இடைநிலை, உயர்தர வகுப்புகளுக்கு செல்லும் மாணவர்கள் மற்றும் கிராம மக்கள் 5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நெடுங்கேணி நகரிற்கு சென்றே பிற இடங்களுக்கு பயணிக்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறான போக்குவரத்து நெருக்கடியினை எதிர் கொண்டுள்ள இக்கிராம மக்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையினை எடுத்து ஒதியமலை கிராமத்திற்கு பேருந்து சேவையினை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-6-350)




அனிதா




குயின்ரன்





கவிதா




டிரோன்




மிலா




முத்துவேல் பாண்டியன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 275





"பார்த்தாயா என் காதலர்களை?" என்று பூங்குழலி கேட்டாள்.

"இந்தக் கொள்ளிவாய்ப் பிசாசுகள்தான் என் காதலர்கள். இவர்களைப் பார்த்துச் சல்லாபம் செய்வதற்குத்தான் நள்ளிரவில் இந்த இடத்துக்கு நான் வருகிறேன்," என்றாள்.

இந்தப் பெண்ணுக்கு நன்றாகப் பித்துப் பிடித்திருக்கிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இவளுடைய உதவியைக் கொண்டு இலங்கைக்குப் போகிறது நடக்கிற காரியமா? இவ்வாறு வந்தியத்தேவன் எண்ணினான். அவனுடைய உள் மனத்திலிருந்து வேறு ஏதோ ஒரு எண்ணம் வெளிவரப் போராடிக் கொண்டிருந்தது. அது என்ன? இந்தக் கொள்ளிவாய்ப் பிசாசுகளைப் பற்றிய ஏதோ ஒரு விஷயந்தான்.

"உன்னுடைய சிநேகிதன் சேந்தன்அமுதனால் இத்தகைய காதலர்களோடு போட்டியிட முடியுமா?" என்று பூங்குழலி கூறியது கிணற்றுக் குள்ளேயிருந்து வரும் குரலைப் போல் கேட்டது. ஏனெனில் அவனுடைய உள்ளம் அப்போது எதையோ ஞாபகப்படுத்திக் கொள்ள முயன்று கொண்டிருந்தது. ஆ! கடைசியில் ஒரு பெரிய போராட்டம் மனதிற்குள்ளேதான் இதோ ஞாபகம் வந்துவிட்டது.

கந்தகம் கலந்த பூமிப் பிரதேசங்களில் தண்ணீர் வெகு காலம் தேங்கி நின்று சதுப்பு நிலமானால், அத்தகைய இடங்களில் இரவில் இம்மாதிரி தோற்றங்கள் ஏற்படும். பூமிக் குள்ளேயிருந்து கந்தகம் கலந்த வாயு வெளியில் வரும் போது நெருப்புப் பிழம்பு வருவது போலிருக்கும். சில சமயம் நீடித்து நிற்கும். சில சமயம் குப்குப் என்று தோன்றி மறையும். இந்த இயற்கைத் தோற்றத்தைக் கண்டு, அறியாத மக்கள் பயப்படுவார்கள். கொள்ளிவாய்ப் பிசாசு என்று பயங்கரப் பெயர் கொடுத்துப் பீதி அடைவார்கள்.

இப்படிப் பெரியோர் சொல்லி அவன் கேள்விப்பட்டிருந்தது, ஞாபகத்துக்கு வந்தது. பிறகு அவனுடைய அறிவுக்கும் பயத்துக்கும் போர் நடந்தது. அறிவு வெற்றி பெற்றது. ஆனால் அதையெல்லாம் இச்சமயம் இந்தப் பிரமை பிடித்த பெண்ணிடம் சொல்லிப் பயனில்லை. எப்படியாவது அவளுக்கு நல்ல வார்த்தை சொல்லி அழைத்துக்கொண்டு போய்விட வேண்டியதுதான்.

"பெண்ணே! உன் காதலர்கள் எங்கும் போய்விடமாட்டார்கள் இங்கேதான் இருப்பார்கள். நாளைக்கும் அவர்களை வந்து பார்க்கலாம் அல்லவா? வீட்டுக்குப் போகலாம், வா!" என்றான்.

அதற்குப் பூங்குழலி மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை விம்மி அழத் தொடங்கினாள்.

'இது என்ன தொல்லை?' என்று வந்தியத்தேவன் எண்ணினான். பின்னர் சற்று நேரம் சும்மா இருந்தான்.

"பெண்ணே! நாம் போகலாமா?" என்று மீண்டும் கேட்டான்.

விம்மல் நிற்கவில்லை. வந்தியத்தேவனுக்கு அலுத்துப் போய்விட்டது.

"சரி உன் இஷ்டம் போல் செய்! எனக்குத் தூக்கம் வருகிறது. நான் போகிறேன்" என்று சொல்லிவிட்டு இறங்கத் தொடங்கினான்.

பூங்குழலி உடனே விம்மலை நிறுத்தினாள். மேட்டிலிருந்து இறங்கத் தொடங்கினாள். நாலே பாய்ச்சலில் வந்தியத்தேவனுக்கு முன்னால் கீழே போய் நின்றாள்.

வந்தியத்தேவன் ஓடிப் போய் அவளைப் பிடித்தான்.

இருவரும் கலங்கரை விளக்கை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

'இந்தப் பித்துப் பிடித்த பெண்ணை நம்பிப் படகில் ஏறுவதாவது? கடலைக் கடப்பதாவது? ஆயினும் வேறு வழி இல்லையென்று தெரிகிறதே? ஏதாவது நல்ல வார்த்தை சொல்லிச் சிநேகம் செய்து கொள்ளப் பார்க்கலாமா?'

"வானத்தில் வால் நட்சத்திரம் தோன்றுகிறதே! அதைப் பற்றி உன் கருத்து என்ன?" என்று பூங்குழலி கேட்டாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தேடிய பொருள் கிடைத்ததா?



சில குட்டிக் கிராமங்கள், அங்க கொஞ்சம் மாயாஜாலங்கள் தெரிஞ்சவங்க, கூடவே கொஞ்சம் கெட்டவங்க என இருந்த அழகிய கிராமங்கள். இதுல ஒரு கிராமத்தில தான் நம்ம லிண்டா வாழ்ந்து வந்தாள்.

இவ தான் நம்ம கதை யோட நாயகி. கொஞ்சம் தன்னம்பிக்கை அதிகம் உள்ள பொண்ணு, ஆனா தனக்காக யாரும் இல்லையே ன்னு கொஞ்சம் ஏங்க வும் செய்யுற பொண்ணு தான் நம்ம லிண்டா. அவளுக்கு அழகா ஒரு குட்டி வீடு இருந்துச்சு. அந்த கிராமமே இயற்கையாக அழகா இருக்கும். பக்கத்துலேயே நீர்வீழ்ச்சி, பூக்கள் நிறைந்த அழகிய தோட்டம். அந்த இயற்கை அழகை பார்த்தாலே நமக்கு கண்டிப்பா சந்தோசம் பிச்சிகிட்டு வரும்.

என்னதான் இருந்தாலும் லிண்டா தன்னோட தனிமையில இந்த சந்தோசத்தை ஒரு நாளும் அனுபவிச்சது இல்ல. ஊருக்குள்ள அவளுக்கு தேவையான வருமானத்தை ஈட்டி தனியாக வாழ்ந்து வந்தாள். யாராவது கஷ்டபடுறதை பார்த்தால் அவங்களுக்கு உதவாம வர மாட்டாள்.

இருந்தாலும் ஏதோ ஒரு விடயத்திற்காக ஏங்கி தன்னோட தனிமையை சாபமாக பார்த்தாள் நம்ம லிண்டா. ஒருநாள் லிண்டா ரொம்பவும் தனிமையாக உணர்ந்தாள். அருகில் இருந்த மலைக்கு தனியாக நடக்க ஆரம்பித்தாள். அவளது மன நிலை மாறிவிடும் என எண்ணி நடந்தாள்.

அவளை அறியாமலேயே நடுக்காட்டிற்குள் சென்று மாட்டிக் கொண்டாள். திரும்பி வருவதற்குள் சூரியனும் மறைந்து விட்டது. என்ன செய்றது என யோசித்து கொண்டே நடந்தாள். தூரத்தில் ஒரு வெளிச்சம் தெரிஞ்சது. இவளும் அதை நோக்கி நடந்தாள். அந்த இடம் இவளது கிராமத்தை விட மிகவும் பிரகாசமாக இருந்தது.

செடிகள் , பழங்கள் மற்றும் பூக்கள் என அனைத்தும்அவள்எட்டித் தொடும் வகையில் அருகில் இருந்தன. அந்த இடம் பல வண்ணங்களால் நிறைந்து இருந்தது. அட இத்தனை அழகான இடத்தை இவ்வளவு நாள் நாம் பார்க்காமல் போய் விட்டோமே என சலித்து கொண்டாள் லிண்டா. அப்படியே நடந்தாள். அந்த கிராமத்திற்குள் செல்ல செல்ல அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது, எந்த ஒரு ஆள் நடமாட்டமும் இல்லை.

எப்படி இப்படி ஒரு அழகிய கிராமத்தை மக்கள் விட்டு வைத்தார்கள் என எண்ணி கொண்டே நடந்தாள். அங்கு ஒரு பெரிய மாளிகையை பார்த்தால் லிண்டா. ஒஹோ ஏதோ ராஜாவோட அரண்மனை போல அதனால் தான் மக்கள் வர அனுமதி இல்லை என எண்ணி கொண்டே அந்த மாளிகைக்குள் நுழைந்தாள். என்ன இந்த மாளிகையில் மெய்காப்பாளர்கள் கூட இல்லையே என நடந்தவளுக்கு பெரிய அதிர்ச்சியை அந்த மாளிகை கொடுத்தது. (தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தில் பெரும் பாகத்தை பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். ~ லா புரூயர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## 2009இல் தண்டித்திருந்தால் 2019இல் குண்டு வெடித்திருக்காது

2019இல் நடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மிகக் கொடூரமான சம்பவம் என உலக நாடுகள் அறிக்கையிட்டன.

ஈஸ்டர் தினத்தில் தேவாலயங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த வேளை, குண்டுத் தாக்குதல் நடத்தி அப்பாவி மக்களைக் கொன்றொழித்த கொடுமையை எங்ஙனம் விபரிக்க முடியும்.

ஆம், அது ஈனத்தனமான செயல். தங்களை மறந்து இறை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வேளை தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் மனிதப் பேரவலம் ஏற்படுத்தப்பட்ட கரி நாள்.

எனினும் இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு தாக்குதல் சம்பவத்தின் பின்னணி, அதன் சூத்திரதாரிகள் யார்? என்ற விடயங்கள் எதுவும் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான தகவல்களை சனல் 4 தொலைக்காட்சி நேற்றைய தினம் வெளிப்படுத்தியிருந்தது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தப்படும் என்ற முன்னறிவித்தலை சனல் 4 தொலைக்காட்சி நிர்வாகம் ஏலவே தெரியப்படுத்தியிருந்தது.

அதன் பிரகாரம் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தை சனல் 4 தொலைக்காட்சி நேற்றைய தினம் வெளியிட்டு மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என தென்பகுதி அரசியல்வாதிகளும் மதத் தலைவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இங்குதான் நம் நாட்டு அரசியல்வாதிகளும் மதத் தலைவர்களும் நேர்மையுடன் செயற்படாததன் விளைவுகளை உணர முடிந்தது.

ஆம், 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்புத் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி ஏகப்பட்ட சம்பவங்களை, ஆதாரங்களை வெளியிட்டிருந்தது.

அதில் பாலகன் பாலச்சந்திரனுக்கு நேர்ந்த அவலமும் உள்ளடங்கியிருந்தது.

இதுதவிர, பெண் போராளிகளுக்கு நேர்ந்த கொடுமை, பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள், வெள்ளைக் கொடியுடன் சென்றவர்களுக்கு நடந்த துயரம் என பல்வேறு சம்பவங்களை வெளிப்படுத்திய சனல் 4; இலங்கை ஆட்சித் தரப்பும் படைத் தரப்பும் சிறுபான்மைத் தமிழ் மக்களைக் கூண்டோடு அழிப்பதற்கு நடத்திய யுத்தமே அது என்பதை துலாம்பரப்படுத்தியது.

இருந்தும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள் என்பதால் அது தொடர்பில் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் மதத் தலைவர்களும் மௌனம் சாதித்தனர்.

அன்று தமிழ் மக்களை கொன்றொழித்த கொடுமையை சர்வதேசம் விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தென்பகுதி அரசியல்வாதிகளும் மதத் தலைவர்களும் விடுத்திருப்பார்களாயின், 2019இல் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தடுக்கப்பட்டிருக்கும்.

பரவாயில்லை ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் இனியேனும் சர்வதேச விசாரணை இடம்பெறுமாயின், அதனூடு 2009 இல் நடந்த தமிழின அழிப்புத் தொடர்பிலும் சர்வதேச விசாரணை நடக்க வாய்ப்புண்டு.

ஆகையால் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணையை அனைவரும் கூட்டாக வலியுறுத்த வேண்டும்.

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை முடியும்வரை பிள்ளையானை பதவி நீக்குங்கள்

## சாணக்கியன் எம்.பி வேண்டுகோள்

(கொழும்பு)

சனல் 4 தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள் முடிவடையும் வரை பிள்ளையானையும் சுரேஸ் சாலேயையும் அவர்களின் பதவிகளில் இருந்து இடை நிறுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்

டுவிட்டர் பதிவில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் நான்காவது வருட நிறைவின் போது நான் இது குறித்து தெரிவித்திருந்தேன் ஆனால் இலங்கை அரசாங்கம் இதனை கவனத்தில் கொள்ளவில்லை.

தற்போது இந்த விடயம் அம்பலமாக்கியுள்ளது விசாரணைகள் முடிவடையும் வரை பிள்ளையானையும் சுரேஸ் சாலேயையும் பதவிகளில் இருந்து இடைநிறுத்தும் நடவடிக்கைகளையாவது அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என் அவர் தெரிவித்துள்ளார். (ம-9)

# திருமலையில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலை - ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆணை தீவு பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்கிழமை மாலை இடம்பெற்றதாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் உயிரிழுந்தவர் ஈச்சிலம்பற்று - இலங்கைத்துறை முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்த சந்திரராஜா கஜேந்திரராஜா (வயது21) என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் வெருகல் பகுதியிலிருந்து இலங்கைத்துறை முகத்துவாரம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியிருப்பதாக பொலிஸ் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த இளைஞனின் சடலம் ஈச்சிலம்பற்று பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம)

# 5 மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

நிலவும்சீரற்ற காலநிலையினால் 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த மாவட்டங்களுக்கு இன்று பிற்பகல் 4 மணி வரையில் இந்த மண்சரிவு எச்சரிக்கை அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே இடியுடன் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மன்னார் மாவட்டத்திலும் இடைக்கிடையே மழையுடனான வானிலை நிலவக்கூடும்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வடமேல், வடமத்திய மாவட்டங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 40 முதல் 45 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# வாழைச்சேனையில் ஆணின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை - ஓமனியாமடு பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை - கிண்ணியடி பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேய்ச்சலுக்கான கால்நடைகளுடன் நேற்று முன்தினம் வீட்டிலிருந்து சென்றிருந்த குறித்த நபர் நேற்றுக் காலை வரை வீடு திரும்பாததால் அவரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அதன்போது, நேற்று அவர் சடலமாக மீட்கப்பட்டதாக தெரியவந்துள்ளது. குறித்த நபரின் மரணத்துக்கான காரணம் தெரியவராத நிலையில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-9)

# இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்க அரசாங்கம் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

தனியார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதிகள் மீதான சகல கட்டுப்பாடுகளையும் 2023ஆம் ஆண்டு இறுதியில் நீக்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாக நிதி அமைச்சின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

குறிப்பாக கோதுமை மா மற்றும் தரை ஓடுகளை நிர்வகிப்பதில் இத்தகைய கட்டுப்பாடுகள் ஏற்படுத்திய இரட்டைக்கொள்கைகளைக் கருத்தில் கொண்டு, அத்தகைய கட்டுப்பாடுகள் எவ்வளவு காலம் இருக்கும் என குழு வினவியபோதே அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன்தலைவர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் நேற்று கூடியபோதே இந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2341 / 38 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் குழுவில் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளைக்கும் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான அரசாங்க நிதிபற்றிய குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. (ம-9)

### உள்நாட்டு இறைவரி சட்டமூலம்

# சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம்- சபாநாயகர்

உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என உயர்நீதிமன்றம் பாராளுமன்றத்திற்கு அறிவித்துள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியதையடுத்து இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின்போது இதனை சபைக்கு சபாநாயகர் அறிவித்தார்.

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டமூலத்திற்கு எதிராக தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளரான சதுரங்க அபேசிங்க உள்ளிட்ட இருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை கடந்த ஆகஸ்ட் 28 ஆம் திகதி முடிவடைந்ததையடுத்து இது தொடர்பான தீர்ப்பு சபாநாயகருக்கு அனுப்பப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்தது.

இவ்வாறான நிலையிலேயே உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என உயர் நீதி மன்றம் பாராளுமன்றத்திற்கு அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

25

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



நீண்டகாலத்திற்குப் பெறப்படும் திறைசேரி முறிகளில் பெரும்பான்மையானவை ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டவை. மொத்த உள்நாட்டுக் கடனில் 29%மானவை ஊழியர் சேமலாப நிதியிலிருந்தும் 8%மானவை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியிலிருந்தும் பெறப்பட்டவை.

இலங்கை அரசாங்கம் உள்நாட்டுக் கடன் குறித்து அக்கறையில்லாமல் இருப்பதற்கான காரணம், இக்கடன் இலங்கை மக்களுக்கு அரசு கொடுக்க வேண்டிய கடன். இதை யாரும் கேட்கப் போவதில்லை, கேட்டாலும் அதைத் தட்டிக்கழிக்கக்கூடிய வகையிலேயே இலங்கையின் அரச கட்டமைப்பு உள்ளது.

இதை இரண்டு சிறிய உதாரணங்களுடன் விளக்கலாம். முதலாவது, ஒருவர் தனது ஊழியர் சேமலாப நிதியையோ ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியையோ பெறுவதற்குப் போனால் இத்தனை நாட்களுக்குள் அதனை வழங்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எனவே அதை தேவையான காலம் தள்ளிப் போடலாம்.

இரண்டாவது உதாரணம், புதிதாக ஓய்வுபெற்றவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் காலதாமதம் நிகழ்கிறது. கொரோனா, மின்சாரம் இல்லை, வீட்டிலிருந்து வேலை எனப் பல காரணங்களைக் காட்டி இத்தாமதம் நிகழ்கிறது.

உள்நாட்டுக் கடனில் பேசப்படாத இன்னொரு வகை யாதெனில் வங்கிகள் அரசுக்குக் கொடுத்த கடன்கள். அரசாங்கம், வெளிநாட்டுக் கடனைப் பெறமுடியாத நிலையில் அரச வங்கிகள் அந்நியச் செலாவணியில் வெளிநாட்டுக் கடனைப் பெற்று அதை அரசுக்குக் கொடுத்துள்ளன.

ஆனால் உள்நாட்டு வங்கி, அரசுக்குக் கொடுத்த கடன் என்ற வகையில் அது உள்நாட்டுக் கடன் என்ற வகையிலேயே அடங்குகிறது.

ஆனால், அவை வெளிநாட்டுக்கு அந்நியச் செலாவணியில் செலுத்த வேண்டிய கடன். இதனை செலுத்த இயலாமையால் அரச வங்கிகள் நெருக்கடியில் உள்ளன.

ஒரு நாடு தனது கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால், அது இறையாண்மை இயல்பு நிலை sovereign default என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக, நாடுகள் இயல்புநிலைக்கு (default) தயங்குகின்றன. ஏனெனில் அவ்வாறு செய்வது பல ஆண்டுகளாக உலக மூலதனச் சந்தைகளை அணுகுவதைத் தடுக்கும் மற்றும் கடன் வாங்குவதை அதிக விலைக்கு (கூடிய வட்டி கொடுத்து கடன் பெறவேண்டி ஏற்படும்) ஆக்கிவிடும். இருப்பினும்,. பல நாடுகள் கடனைத் திருப்பிச் செலுத்தாமலும் இருந்துள்ளன. 1998 இல் ரஷ்யா மற்றும் உக்ரைன், 2014 மற்றும் 2019 இல் ஆர்ஜென்டினா, 2008 மற்றும் 2020 இல் ஈக்வடார், மற்றும் இலங்கை (2022இல்) என்பனவாகும். இலங்கை இந்த நூற்றாண்டின் முதல் ஆசிய-பசுபிக் நாடு.

### இலங்கையின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்பது வங்கிகளிடமிருந்து அரசாங்கம் கடனை பெற்றுக்கொண்டுள்ளது. அதேபோன்று, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றிலிருந்தும் அரசாங்கம் கடனை பெற்றுக் கொண்டுள்ளது. அந்தக் கடன்களின் ஒரு பகுதியை எப்படி ரத்துச் செய்யலாம் என்பதையோ அல்லது வட்டி விகிதங்களைக் குறைப்பதையோ அல்லது அவற்றைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலக்கெடுவை நீடிப்பதையோ நோக்கமாக கொண்டது.

மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி (அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்திவிட்டதாக கூறுகிறது) அரசாங்கத்திற்கு வழங்கிய கடனை அல்லது ஒரு பகுதியை இந்த நிறுவனங்கள் ரத்துச்செய்ய முடிவெடுத்தால் அது யாருடைய பணம் என்ற கேள்வி எழுகிறது. அது பொதுமக்களின் பணம். இது பொதுமக்களின் பணமாக இருப்பதால் இது பெரியதொரு விவாதப்பொருளாக மாறியுள்ளது.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநரும் ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகருமான இந்திரஜித் குமாரசுவாமி, பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் பின்வருமாறு தெரிவித்தார்: "நாங்கள், உள்நாட்டுக்கடனை மறுசீரமைப்பது குறித்துப் பேசக் கூடாது. அது சிந்திக்கக்கூடாதவொரு விடயம். ஏனெனில் அவ்வாறு மறுசீரமைப்பதால் எம்மால் எமது வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்த இயலுமா? இல்லை. மேலும் உள்நாட்டுக் கடனில் கைவைப்பது மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தும். அது எமது வங்கித் துறையை மட்டுமன்றி மொத்த நிதியமைப்பையே சரித்து சிதைத்து விடும்" என்றார்.

வங்கிகளை எடுத்துக்கொண்டால், பொதுமக்கள் வைப்பு செய்யும் பணத்தை திறைசேரி (Treasury) முறி, திறைசேரி (Treasury) உண்டியல் ஆகியவற்றில் முதலீடு செய்திருக்கும். அதிலிருந்து கிடைக்கும் லாபத்தில் வங்கி ஒரு வருவாய் லாபத்தை அனுபவிக்கும். அதில் ஒரு சிறிய பகுதியை வட்டி என்ற அடிப்படையில் பொதுமக்களுக்கு கொடுக்கும்.

"திறைசேரி வட்டி வீதம் 30, 32 வீதமாக இருந்தது. ஆனால் வைப்பாளர்களுக்கு கொடுத்த வட்டி 15% வீதமாக இருந்தது. அண்மைக் காலமாக மிகக் குறைவு. அதே போன்று ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியன திறைசேரி ஊடாகவே அரசாங்கத்திற்கு கடனை வழங்கியுள்ளது. இப்படி வழங்கப்பட்ட கடனில் ஒரு பகுதியை பதிவளிப்பு செய்யலாமா என்றே பார்க்கின்றார்கள். இது எவ்வளவு தூரம் சாத்தியமாகிறது என்பதையும் அதன் பின்விளைவுகளையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### வங்கிகளுக்கு விதிவிலக்கு

அரச மற்றும் தனியார் வங்கிகளிடம் திறைசேரி பெற்றிருக்கின்ற கடன்களுக்கு மறுசீரமைப்பு செய்யப்படமாட்டாது என்று அரசு அறிவித்துள்ளது. கடன் மறுசீரமைப்பு திட்டம் பொதுமக்களின் வங்கி வைப்புகளை பாதுகாக்கும் முதன்மை நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்படும் அனைத்து வங்கிகளின் வைப்பாளர்களையும் பாதுகாக்கும் பொறுப்பை ஜனாதிபதி அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளார். உத்தேச உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு முறையானது வங்கி வைப்பாளர்களுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் வங்கி முறையின் வீழ்ச்சிக்கு வழி வகுக்காது என்றும் அவர் உறுதியளித்தார். மாறாக, பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பக் கூடிய மறுசீரமைப்பு செயல்முறைக்கு வழி வகுக்கும் என்றும் கூறியுள்ளார்.

### ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியங்களுக்கு ஒரு குறிப்பிட்ட வட்டி வழங்கப்படும் அரசு உறுதி.

கடன் [illegible]வதற்காக ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியங்களுக்கு ஏற்கனவே வழங்கிய திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைமுறிகளை மீண்டும் பெற்று, திறைசேரி புதிய முறிகளை வழங்கவுள்ளது. அவற்றுக்கு 2025 ஆம் ஆண்டு வரை 12% வட்டியும் அதன்பின்னர் பிணைமுறி காலம் முடியும் வரை 9% வட்டியும் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இதனால் இந்த நிதியங்களின் உறுப்பினர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று கூறப்படுகிறது. ஆனால் எதிர்க்கட்சிகளின் கருத்துப்படி இதனால் உறுப்பினர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் தற்போது வரையறுத்த வட்டி வீதத்தை விட கூடிய வட்டியைப் பெறுவதற்கான சாத்தியம் இருக்கின்றதென்றும் மேலும் சொல்லப்பட்ட வட்டி வீதம் வழங்கப்படுமா என்பதில் உத்தரவாதம் வழங்கப்படுமா என்றும் கேட்கின்றது. அரசாங்கம் தனது யோசனைகளை வைக்கும் போது நிதியங்கள் என்ன முடிவு எடுக்கப் போகின்றன என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

### ஊழியர் சேம நிதியம் பற்றி…….

ஓய்வூதிய சலுகைகளை அனுபவிக்காத தனியார் மற்றும் அரச சார்பான துறை ஊழியர்களுக்கு கட்டாயமாக வரையறுக்கப்பட்ட பங்களிப்பு ஓய்வூதிய திட்டமாக 1958 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதியம் (ஊ.சே.நி) நிறுவப்பட்டது. இலங்கையில் மிகப்பெரிய ஒரு ஓய்வூதிய நிதியமாக இருப்பதோடு, 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ஊ.சே.நிதியமானது ரூ. 2,824 பில்லியனான ஒரு சொத்து அடிப்படையை முகாமை செய்கின்றது.

சட்டத்தின் விதிகளின் படி, அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற முறையில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதே வேளையில் தொழில் ஆணையாளர் பொது நிர்வாகியாக செயற்படுகின்றார்.

நிதி முகாமைத்துவமானது இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே.நி. திணைக்களம், நாணயச் சபைக்கு சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்ற வசதியளிக்கின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனவரி முதல்...

செயற்பாடுகளுக்காக எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வடக்கு தொடருந்து பாதையை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், கொழும்பு முதல் பாணந்துறை வரையிலான தொடருந்து பாதையை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் சில நாட்களுக்குள் ஆரம்பிக்கப்படுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை மணித்தியாலத்திற்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் தொடருந்துகளை இயக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

களனி மிட்டியாவத்தை தொடருந்து பாதையின் வேகக் கட்டுப்பாட்டை நீக்கி, வேகத்தை அதிகரிப்பதற்கான புனரமைப்புப் பணிகளையும் இம்மாத முற்பகுதியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## கொக்குத்தொடு...

வி.கே.நிரஞ்சன், கொக்குளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தடயவியல் பொலிஸ் பொறுப்பதிகாரி, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட தரப்பினர் இடத்தை பார்வையிட்டு கலந்துரையாடி இருக்கின்ற வளங்களுடன் இன்று காலை 7.30 மணிக்கு அகழ்வுப் பணியை ஆரம்பிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ,

சீரற்ற காலநிலை காரணமாக நேற்று ஆரம்பிக்கப்பட இருந்த மனித புதைகுழி அகழ்வு பணியானது இன்று காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என தெரிவித்தார்.

அகழ்வு பணிகள் எவ்வளவு காலம் இடம்பெறும் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு ஏற்கெனவே 13 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எப்போது நிறைவடையும் என்பது பற்றி தற்போது கூறமுடியாது அகழ்வுப் பணி தொடர்ந்து நடக்கும் பட்சத்தில் எவ்வளவு காலம் நடைபெறும், எத்தனை இருக்கும் என்பது தொடர்பாக கூற முடியும் என மேலும் தெரிவித்தார். (ம-7,299)

## நாகர்கோவிலில்...

டுள்ளது.

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நடைபெற்று வரும் நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாம்பழத் திருவிழா இடம்பெற்றது.

இதில் இரவு பூசையின்போது மாம்பழம் ஒன்று ஏலம் விடப்பட்டது.

இதன்போது 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு மாம்பழம் ஒன்று ஏலம் போயுள்ளது. (ம-60)

## சனல் 4...

வெளியிட்டுள்ள காணொளிகுறித்து ஜனாதிபதி தலைமையில் திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தினோம்.

இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு ஊடாக விசாரணைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் தேவையாயின் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் விவகாரம் குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் ஒருபோதும் பின்வாங்காது. ஜெனிவா கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில்தான் இவ்வாறான காணொளிகள் வெளியாகுகின்றன.

கோட்டபய ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிக்காக குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அவ்வாறாயின் அதிகாலையில் சென்று கோட்டபய ராஜபக்ஷவுக்கு வாக்களியுங்கள் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அப்போது குறிப்பிட்டார்.

மறுபுறம் ஒருதரப்பினர் அழுது கொண்டு ஒரு தரப்புக்கு சார்பாக செயற்பட்டார்கள். ஆகவே இவர்கள் அனைவரும் கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்துக்கு உடந்தையாக செயற்பட்டவர்களாக கருத வேண்டும் என்றார். (ம-7)

## மக்களை...

2019 ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான அதிர்ச்சித் தகவலை பிரித்தானியாவின் சனல் 4 வெளியிட்டுள்ள நிலையில் அதன் முன்னோட்ட காணொலியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த ஆஸாத் மௌலானா வெளியிட்ட கருத்து வெளியாகியுள்ளது.

அதில் கடும்போக்கானவர்கள். அவர்களில் ஒருவரை சந்திக்குமாறு (சிறையில் இருந்த) பிள்ளையான் என்னிடம் தெரிவித்தார்'' என ஆஸாத் மௌலானா குறிப்பிடுகின்றார்.

இதையடுத்து இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான தேசிய தவ்ஹீத் ஜமாத்தை (NTJ) சேர்ந்த செய்னி மௌலவியை தான் சந்தித்தார் எனவும் - கடந்த 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிள்ளையான் உளவுத்துறை அதிகாரி சுரேஷ் சலேக்கும் அந்த அமைப்பினருக்கும் இடையில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு தன்னிடம் கூறினார் எனவும் ஆஸாத் மௌலானா குறிப்பிடுகின்றார்.

இதையடுத்துத்தான் தேசிய தவ்ஹீத் ஜமாத்தை (NTJ) சேர்ந்தவர்களுக்கும் உளவுத்துறை அதிகாரி சுரேஷ் சலேக் கும்இடையிலான சந்திப்பை ஏற்பாடு செய்தார் எனவும், சந்திப்பு நிறைவடைந்து வெளியில் வந்த சுரேஷ் சலே "ராஜபக்ஷர்களுக்கு இலங்கையில் ஒரு குழப்பமான நிலை தேவையாக உள்ளது.

அதுவே கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க ஒரே பொருவழி" என்று கூறினார் எனவும் ஆஸாத் மௌலானா அக்காணொலியில் குறிப்பிடுகின்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற பின்னர், முன்னர் யாரெல்லாம் சந்திப்பில் கலந்துகொண்டார்களோ அவர்களின் முகங்களைத் தான் அடையாளம் கண்டார் எனவும், பிள்ளையானிடம் இது பற்றி கேட்ட போது "நீ வாயை மூடிக்கொண்டு எதுவும் தெரியாததுபோல் இரு. அதுபோதும்" என அவர் தன்னிடம் கூறினார் எனவும் தெரிவிக்கும் ஆஸாத்மௌலானா, "சொந்த மக்களையே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற அவர்கள் கொலை செய்தார்கள். இதுவொரு கசப்பான உண்மை" என்கிறார்.

பிரித்தானிய தொலைக் காட்சி அலைவரிசையில் நேற்று ஒளிபரப்பப்பட்ட 'சனல் - 4 டிஸ்பாட்ச்கள்' ஆவணப்படத்தின் முன்னோட்டத்தில் இந்த கருத்துக்களை ஆஸாத் மௌலானா குறிப்பிட்டார். (ம)

## எந்தத்...

பெறும் என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில், "பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஜனாதிபதித் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளமை" தொடர்பில் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு கிடையாது. அவ்வாறான முயற்சிகளும்முன்னெடுக்கப்படவில்லை. அதில் எவ்வித சந்தேகங்களையும் ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. அடுத்த வருடம் அந்தந்த தேர்தல்கள் அந்தந்த நேரத்தில் நடத்தப்படும் என்றார். (ம)

மெகா பவர்
திகதி 05/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1576
M 13 40 41 64 71
62919

தன நிதானய
திகதி - 2023.09.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1258
B 10 28 34 41 B
27584

Lucky 7
திகதி 05.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0054
L7 இலக்கம் 1 8
மகரம் 1 0 4 5 7 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3470
சீட்டிழுப்பு திகதி 05.09.2023
G 11 46 54 72
G
49247

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.09.05
சீட்டிழுப்பு இலக்கம் 537
கும்பம் 09 35 37 50 கும்பம்

மஹஜன சம்பத
திகதி 2023/09/05
சீட்டிழுப்பு இலக்கம் 5228
A 0 3 2 7 2 5

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2202 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.05 தினம் செவ்வாய்க்கிழமை
09 24 25 74 N
ரூ. 64,985,020.40
60665 750

சனிதா
திகதி 2023.09.05 வெற்றி வாரம் 4363 வர்ணம் பச்சை
03 04 36 73 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,466,840.00
51648 507

சசிரி
வெற்றி வாரம் 372
சீட்டிழுப்பு திகதி 2023.09.05
13 25 38
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 3,073,240/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3914 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.09.05 தினம் செவ்வாய்க்கிழமை
05 11 25 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,977,280/-
29571 852

திகதி 05.09.2023 வெற்றி வாரம் 1378
N 30 25 42 45 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 436,271,764.20
20971 938
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk

அட கோடிபதி
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2028
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,214,128/-
சீட்டிழுப்பு திகதி : 2023.09.05
26 32 58 76 M
35897 572

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16913)

**076 825 7716** (ஆகாஸ்)

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7187)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 5392, 076 315 6470**

## வாடகைக்குத் தேவை

**கடையுடன் கூடிய வளவோ அல்லது சிறு வீட்டுடன் கூடிய வளவோ வாடகைக்குத் தேவை.**

- A9 வீதி மாம்பழம் சந்திக்கும் யாழ்.நகரப் பகுதிக்கும் இடையில்
- யாழ்.நகரப் பகுதியில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து நல்லூர் வரையில் உள்ள பகுதியில்
- காங்கேசன்துறை வீதியில் யாழ். நகரப் பகுதியிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரம் வரையில்

தொடர்புகளுக்கு : (16959)
**077 593 0335**

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (16957)

**077 728 6061**

## பணிப் பெண் தேவை

யாழ்.நகரில் உள்ள 05 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய 40-55 வயதுடைய இரு பெண் வேலையாள்த் தேவை

- சமையல் வேலை
- இரு குழந்தைகளைப் பராமரிப்பதற்கு

சம்பளம் ஒருவருக்கு 45,000/-

**075 498 5400, 077 937 0000**
**075 988 1000** (16956)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியியல் கற்கை நெறிகள்**
**Banking Courses**
**DBF & HDBF (16/09/2023)**
(IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம்)

**கணக்காளர் கற்கை நெறிகள்**
**Chartered Accounting Courses**
Business Level I,II (16/09/2023)

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat (Sri Lanka)**
(AA1 - 09.09.2023) G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
**(AA2, AA3 -09/09/2023)** (C-7198)

**Certificate Course in English**

**Further Details :** Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/021 222 9149
077 440 5917

## வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை

மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
T.P : 0777 55 45 28 (16905)
321, K.K.S. Road, Jaffna.

## காணி விற்பனைக்கு

ராஜ பாதை வீதி , கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய முன் வீதியில் (மிக அண்மையில்) 11 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது. (16934)

**077 307 5198**

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7199)
**0777-068-777**
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✔ ONLINE APPLICATIONS
- ✔ VISA APPOINTMENTS
- ✔ PASSPORT APPLICATION
- ✔ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-7199)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
**0777-068-777**

# TECHNO WORLD
## தொழில்நுட்ப கல்லூரி

TECHNO WORLD INNOVATIVE IDEAS OPEN NEW WORLD

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

இம்முறை தேசிய, மாவட்ட ரீதியில் முதல்நிலை பெற்ற மாணவர்கள் தொடர்ந்து ஆறாவது முறையாகவும் முன்னிலையில்

உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு
### BIO SYSTEMS TECHNOLOGY

| NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK |
|---|---|---|---|---|---|---|---|---|
| அஸ்வினி | A2B | 1 | சஜீனா | C2S | 6 | சங்கீதா | 2CS | 18 |
| நிரோமி | B2C | 2 | ஜீரோசி | 2CS | 7 | குகப்பிரியா | B2C | 20 |
| அபிவர்சனா | B2C | 2 | சயந்தினி | A2B | 7 | தவருக்சன் | 3C | 22 |
| கனிஸ்கா | 3B | 2 | தனுசா | C2S | 7 | தர்சிகா | 3C | 22 |
| அன்ரனிஸ் | 3B | 2 | அர்சனா | B2C | 7 | திலக்கிகா | 3C | 24 |
| நந்தவி | 3C | 3 | டிலுக்சினி | C2S | 9 | மிருதார்தன் | 3C | 24 |
| அகஸ்ரா | 2BC | 3 | ஜெயதர்சினி | 2CS | 11 | தர்சிகா | C2S | 24 |
| டென்சியா | 2BS | 4 | ரிகானி | C2S | 12 | திலக்சிகா | 3C | 24 |
| ரேமியன் | 3C | 5 | சதுர்சிகா | B2C | 13 | தர்சிகா | 3C | 25 |
| காவியா | A2B | 5 | யதுர்சினி | 2CS | 13 | சமந்தி | 3C | 26 |
| செறின் | 3A | 6 | பவித்திரா | 2BC | 14 | பிரவினா | 2CS | 28 |
| தேனுஜா | B2C | 6 | சிவஸ்துதி | B2C | 16 | சுபுகரினி | 2BC | 31 |
| அனுசிகா | ABC | 6 | ரகசா | 2CS | 17 | குகப்பிரியா | 2CS | 35 |

பொறியியல் தொழில்நுட்ப பிரிவு
### ENGINEERING TECHNOLOGY

| NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK |
|---|---|---|---|---|---|---|---|---|
| திபன்பரபாகர் | 2AB | 1 | ஜானுசன் | 3C | 7 | இனியவன் | 3C | 31 |
| கிருபாகரன் | 2AB | 3 | றோங்கில் | B2S | 8 | ரா்குலன் | 3C | 39 |
| நிரோஜன் | 3B | 3 | சிந்துஜன் | 2CS | 9 | தனுசாந் | B2C | 40 |
| கனிஸ்ரன் | 2AB | 4 | லக்சன் | C2S | 9 | சப்நொான் | A2B | 42 |
| பதுசன் | 2BC | 4 | மாா்க் டெக்சன் | C2S | 10 | பிரதீபா | B2C | 43 |
| லக்சனா | 2AB | 5 | ஜதுசன் | A2B | 10 | புஸ்பகுமாா் | 3C | 47 |
| மரின்டா | 3C | 6 | ஜசியா | 2BC | 22 | பசித் | B2C | 58 |
| சாம்சன் | BCS | 6 | தமிழழகன் | B2C | 24 | மனுஜன் | 2CS | 59 |
| மேரி ஜொ்மிலா | A2B | 7 | பகீரதன் | B2C | 27 | சகீப் | B2C | 59 |

**புதிய பிரிவுகள் ஆரம்பம் A/L 2023 Day class**
**ஆரம்பம் 08.09.2023 நேரம் - மாலை 3.30**
**Phone No : 077 017 5346** (C-7194)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் குடும்பத்திற்கு 4 கி.மீற்றர் தூரத்திற்கு உட்பட்ட வகையில் நல்லூர், பலாலி வீதி, பிறவுண் வீதி ஆகிய பகுதிகளில் 2-3 அறைகள், இணைந்த குளியலறை வாகனத் தரிப்பிடத்துடன் வீடு உடனடியாக வாடகைக்குத் தேவை. (16948)

**077 808 1794**

## வீடு விற்பனைக்கு

கச்சேரிக்கு அண்மையாக முதலியார் வீதியில் 1 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (16946)

**076 675 7518**

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 23.08.2023 புதன்கிழமை அன்று சிவப்பேறடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர் திருமதி
**மாணிக்கம்**
**தெய்வேந்திர ஐயர்**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 07.09.2023 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
தொடர்ந்து நண்பகல் 11.00 மணியளவில் இடம்பெறும் சபிண்டீகரணக் கிரியையிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (16955)
இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

செல்வச் சந்நிதி,
தொண்டைமானாறு.

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org